விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 01 புதன்கிழமை (17.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 210

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# யாருக்கும் அடி பணியோம்; மாகாண அதிகாரம் நீக்கப்படும்



## விமல் வீரவன்ஸ சூளுரை

[கொழும்பு]

**இந்தியா உள்ளிட்ட எந்தக் கொம்பன்களின் அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்று அமைச்சர் விமல் வீரவன்ச சூளுரைத்துள்ளார்.**

வட மாகாண சபைத் தேர்தலுக்கு முன் மாகாண சபைகளுக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகள் நிச்சயம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு தனிப்பட்ட ரீதியில் உத்தரவாதமொன்றை அளித்திருப்பதாகவும், ஜனாதிபதி தனது முன்னைய உத்தரவாதங்களை நிறைவேற்றியது போன்று இதனையும் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் (19ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலில் போட்டியிட இனவாதிகளுக்கு இடமில்லை

## ஆளும் கட்சிக்குள் எதிர்ப்பு

(கொழும்பு)

இனவாதச் சிந்தனை கொண்டவர்களுக்கு ஆளுங்கட்சியின் பட்டியலில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட இடமளிக்கக் கூடாது என்று ஆளுங்கட்சிக்குள்ளேயே எதிர்ப்பலை தோன்றியுள்ளது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஜாதிக ஹெல உறுமய மற்றும் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி ஆகியவற்றின் வேட்பாளர்களுக்கே ஆளுங்கட்சியின் பட்டியலில் தேர்தலில் போட்டியிட இடமளிக்கக் கூடாது என்று ஆளுங் கட்சி முக்கியஸ்தர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

தென்மாகாண சபையின் ஆளுங் கட்சி முக்கிய உறுப்பினரும், முன்னாள் இராணுவ அதிகா ரியுமான மேஜர் அஜித் பிரசன்ன இது தொடர்பில் பகிரங்கமாகவே தனது எதர்ப்புக் குரலை வெளிப்படுத்தியுள்ளார்.

மாகாண சபையின் அதிகாரங்களை குறைப்பது தொடர்பான அரசின் முயற்சிகளை எதிர்த்து பகிரங்கமாக குரல் கொடுத்த இவர், பின்னர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கடுமையான எச்சரிக்கையை எதிர் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது சரத் பொன்சேகாவுக்கு எதிராக இராணுவத்தினரின் வாக்குகளை ஆளுங்கட்சிக்குப் பெற்றுக் கொடுப்பதில் இவர் முன்னின்று செயற்பட்டிருந்தார். இந்நிலையில் தற்போது அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டே இனவாதத்தை தூண்டுபவர்களுக்கு எதிராக இவர் குரல் கொடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ள மேஜர் அஜித் பிரசன்ன, ஜாதிக ஹெல உறுமய மற்றும் (19ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு வேட்பாளர்களின் தெரிவு இன்று இடம்பெறும்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக கூட்டமைப்பின் வேட்பாளர் நியமனக் குழு இன்று யாழ்ப்பாணத்தில் கூடவுள்ளதாக கட்சியின் உயர் மட்டம் கருத்துத் தெரிவித்துள்ள நிலையில், மிகுந்த எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கொழும்புத் தலைமையகத்தில் நடைபெற்ற மூன்று நாள் கலந்துரையாடலின் பின்னர் கட்சியின் முதன்மை வேட்பாளராக சி.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில், வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில், போட்டியிடவுள்ள வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக 10 பேர் கொண்ட வேட்பாளர் நியமனக் குழு இன்று யாழ். மார்ட்டின் வீதியிலுள்ள தமிழரசு கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் கூடவுள்ளது.

இதேவேளை மாகாணசபைத் தேர்தலில் மிக முக்கியமான யாழ். மாவட்டத்தில் செல்வாக்குள்ள, தகுதி வாய்ந்த பலர் ஏற்கெனவே கூட்டமைப்பின் தலைமையினாலும், கட்சிகளின் தலைமைகளினாலும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவித்திருக்கின்றன. (எ-11)

# பொதுநலவாய மாநாட்டில் இளவரசர் சாள்ஸ் பங்கேற்பு!

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் இளவரசர் சாள்ஸ பங்கேற்பார் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவி பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் சார்பில் இளவரசர் சாள்ஸ் அமர்வுகளில் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிரித்தானியாவின் சார்பில் யார் பங்கேற்பார்கள் என்பது பற்றிய இறுதித் தீர்மானம் இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் தங்களது பிரதிநிதிகளை இலங்கை அமர்வுகளுக்கு அனுப்பி வைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிலைமைகளை நேரில் கண்டறிவதற்கு இந்த அமர்வு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)

## விக்னேஸ்வரனுக்கு மன்னார் ஆயர் வாழ்த்து

(மன்னார்)

முதலமைச்சர் வேட்பாளராக சி.வி.விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டமைக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் வாழ்த்துக் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக சி.வி.விக்னேஸ்வரன் வரவேண்டும் என தான் ஏற்கெனவே கூறியிருந்ததாக மன்னார் ஆயர் இராயப்பு யோசப் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலா (19ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ். சென்ற 4 பேர் பலி

(சிட்னி)

புகலிடக் கோரிக்கையாளர் படகு விபத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அருகாமையில் இந்த விபத்து இடம்ற்றுள்ளது. படகில் பயணித்த 144 பேர் மீட்கப்பட்டதாக அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரண்டு கடற்படை படகுகளைப் பயன்படுத்தி புகலிடக் கோரிக்கையாளர்கள் மீட்கப் (20ஆம் பக்கம் பார்க்க)

# வட மாகாணசபைத் தேர்தல் வெற்றி தமிழ் மக்களுக்கான விடிவு அல்ல!

## ஒளிக்கீற்று மட்டுமே என்கிறார் மாவை

(வவுனியா)

வடக்கு மாகாணசபை தேர்தல் வெற்றி என்பது விடிவல்ல, அது எமது அரசியல் பாதையில் ஒளிக்கீற்று மட்டுமே என வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினருடனான சந்திப்பில் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசாவுக்கும், வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினருக்குமிடையில் நேற்று காலை 11.00 மணியளவில் இந்திரன்ஸ் விருந்தினர் விடுதியில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

பிரஜைகள் குழுவை சேர்ந்த கி.தேவராசா தலைமையில் நடைபெற்ற இந்த சந்திப்பில், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுக்களின் காப்பாளரும், மனித உரிமை ஆர்வலருமான சண்



மாஸ்டர், மற்றும் பிரஜைகள் குழுவின் வரையறுக்கப்பட்ட தலைமைக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

சமகால அரசியல் விடயங்கள் தொடர்பாகவும், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாகவும், வடமாகாண சபையில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தெரிவின்போது அவர்களின் ஆளுமைகள் தொடர்பிலும், தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதிரொலிக்க வேண்டிய தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பாகவும் இச் சந்திப்பில் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிக் காசோலை வழங்கி பெற்றோல் நிரப்பியவர்கள் கைது
## ஒருவர் வங்கி ஊழியர்

(யாழ்ப்பாணம்)

போலிக் காசோலையை பயன்படுத்தி பெற்றோல் பெற முற்பட்ட வங்கி ஊழியர் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பிரதான வீதியில் அமைந்துள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவது; ஐந்நூறு ரூபாய் போலிக் காசோலையை பயன்படுத்தி பெற்றோல் நிரப்ப முற்பட்ட மேற்படி நபர்கள் மீது சந்தேகம் கொண்ட பெற்றோல் நிரப்பு ஊழியர் இது தொடர்பில் ஆராய்ந்தபோது, ஐந்நூறு ரூபாய் உட்பட பல போலிக் காசோலைகளை அவர்களிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து வங்கி ஊழியர் உட்பட மூவரை பொலி ஸார் கைது செய்தனர்.

இவர்கள் மூவரும் இன்று நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (எ-4,11)

## இரு இலங்கையர்கள் கைது

பிரித்தானியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த இரு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

21 மற்றும் 22 வயதுடைய இளைஞர்கள் இருவர் விசா முடிவடைந்த நிலையில் உணவகம் ஒன்றில் சட்டவிரோதமாக வேலை செய்து வந்துள்ளனர். இதன்போது குடிவரவு அதிகாரிகளினால் கைது செய்து செய்யப்பட்டுள்ளதாக பிரித்தானிய தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

# விக்னேஸ்வரன் தெரிவானமையால் முஸ்லிம்களுக்கு நியாயம் கிடைக்கும்
## முஸ்லிம் மக்கள் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

வட மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதும் அரசியலில் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுமாகும் என முஸ்லிம் மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனுக்கு முஸ்லிம் மக்கள் கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீதினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழ் பேசும் மக்களின் பாரிய எதிர்பார்ப்புக்களைக் கொண்ட வட மாகாணத்துக்குரிய முதலமைச்சர் வேட்பாளருக்கான அனைத்து தகுதிகளும் த.தே.கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜாவுக்கு இருந்தும் அரசியலில் ஈடுபடாத முன்னாள் நீதியரசரை தெரிவு செய்துள்ளமை தமிழ் பேசும் மக்களின் அரசியல் வரலாற்றில் மிகப் பெரிய திருப்புமுனையாகும்.

அத்துடன் நீதித்துறையில் புகழ் பெற்ற விக்னேஸ்வரன் அரசியல் ஒரு சாக்கடை என கூறிக்கொண்டு தனது சமூகத்தை மறந்து மக்களுக்கான சேவையிலிருந்து ஒதுங்கும் முடிவை மேற்கொள்ளாது தேர்தல் வேட்பாளராவதை அவர் ஏற்றுக்கொண்டமை மிகச்சிறந்த எடுக்காட்டாகும்.

இதன் மூலம் புத்திஜீவிகளின் அரசியல் பிரவேசம் மூலம் மக்களுக்கான அரசியல் முன்னெடுக்கப்படும் சாத்தியங்கள் உள்ளன. இத்தகைய ஒருவர் வட மாகாண சபை முதலமைச்சராக வருவதன் மூலம் அங்கு வாழும் தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கு நியாயம் கிடைக்கும் என்பது முஸ்லிம் மக்கள் கட்சியின் எதிர்பார்ப்பாகும் என்றுள்ளார் (எ-11)

### படையினருக்கு பயிற்சி
# இந்தியா மறுத்தது பாக். அணைத்தது

(சென்னை)

வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் இருந்து வெளியேற்றப்பட்ட இலங்கையின் இரு படை அதிகாரிகளும் அதே பயிற்சிகளுக்காக பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஹரிஸ் சந்திர ஹெற்றியாராச்சி மற்றும் விமானப் படையை சேர்ந்தவிங் கொமாண்டர் பண்டார தசநாயக்க ஆகியோர் அதே பயிற்சிக ளைப் பெறுவதற்காக கடந்த வார இறுதியில் பாகிஸ்தான் சென்றுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு குவேட்டா இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகள் வழங்கப் படவுள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினருக்கு தமிழகத்தில் பயிற்சி அளிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து வெலிங்டனில் பயிற்சி பெற்று வந்த இவ்விரு இராணுவ அதிகாரிகளுக்கும் வேறிடத்தில் பயிற்சி வழங்க இந் தியா ஏற்பாடு செய்திருந்தது.

ஆனால் இந்தியாவின் இந்த ஏற்பாட்டை நிராகரித்த இராணுவத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இவ்விரு இராணுவ அதிகாரிகளையும் கொழும்புக்கு திரும்ப அழைத்திருந்தார்.

இதையடுத்து கொழும்புக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த பாகிஸ்தான் இராணுவத் தளபதிஊடாக இவ்விரு இராணுவ அதிகாரிகளுக்கும் குவேட்டாவில் பயிற்சிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டமை தெரிந்ததே. (எ-11)

# ஷிராணி தொடர்பான 5 மனுக்களை ஆராய முடிபு

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பான ஐந்து மனுக்களையும் ஐந்து நீதியரசர்கள் குழு முன்னிலையில் ஆராய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உரிமை மீறல் மனுக்கள் நான்கு மற்றும் மேன்முறையீட்டு மனுவொன்றே இவ்வாறு ஆராயப்படவிருக்கின்றது.

நீதியரசர்களான சலீம் மர்சூக், சந்திரா ஏக்கநாயக்க, சந்தியா ஹெட்டிகே, ஈவா வணசுந்தர மற்றும் ரோஹினி மாரசிங்க ஆகியோர் கொண்ட குழாம் முன்னிலையிலேயே ஆராயப்பட விருக்கின்றது.

முன்னாள் நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டார நாயக்கவிற்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரணைக்கு உட்படுத்திய நாடாளுமன்ற தெரிவுக்குழு சட்ட விரோதமானது என கோரியும், அந்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவை நியமித்த நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 78(அ) சட்டத்திற்கு விரோதமானது என்பதனால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்கும் அதிகாரத்தை சூன்யப்படுத்துமாறு கோரியே உரிமை மீறல் மனுக்கள் நான்கு தாக்கல் செய்யப்பட்டன.

அத்துடன், முன்னாள் நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தீர்மானத்தை இரத்துச் செய்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்ட ரீட் கட்டளையை இரத்துச் செய்யக்கோரி சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு ஆகியனவே ஆராயப்படவுள்ளன. (எ-11)

# காவியுடை தரித்தவர்களால் இறைச்சி லொறி தீக்கிரை

(கொழும்பு)

காவி உடை அணிந்த நான்கு பேர் கொண்ட குழுவொன்றினால் லொறி யொன்று தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெமட்டகொடை, பேஸ்லைன் வீதியில் உள்ள இறைச்சி மடுவத்துக்கு அருகிலேயே இச்சம்பவம் பதிவாகியுள்ளதாக கூறப்படுகிறது.

குறித்த இறைச்சி மடுவத்திலிருந்து இறைச்சி கொண்டு செல்வதற்காக வருகை தந்துள்ள லொறியே இவ்வாறு தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவமானது நேற்று அதிகாலை 1.50 மணியளவில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# கலைப்பிரிவு மாணவர்களுக்கு முல்லைத்தீவில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றினை யாழ்.பல்கலைக் கழக கலைப் பீட மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

இவ்கருத்தரங்கு எதிர்வரும் 18, 19-ம் திகதிகளில் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.


இக்கருத்தரங்கு இம்முறை நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு நடைபெறவுள்ளது.

தமிழ், இந்து நாகரிகம், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களுக்கான விரிவுரைகள், பரீட்சை விளக்கங்கள் என்பன இக்கருத்தரங்கில் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இக்கருத்தரங்கினை யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட பேராசிரியர்கள், சிரேஷ்ட [illegible] ஆகியோர் இணைந்து நடத்த [illegible] அறிவித்துள்ளது. (எ-4)


## 38-வது பிறந்த நாள் நினைவினில்...

### அமரர் கார்த்திகேசு-செந்தில்க்குமார்
**பழைய மாணவன்**
**யா.கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்**



என்றும் எம் மனதை விட்டு அகலாத எங்கள் பாச உறவே
நீ பிறந்த நாளில் உன்னை எங்கள் மனங்களில் நிறுத்தி பூசிக்கின்றோம்.
உன் ஆத்மா சாந்தி அடைய தினமும் இறையாசி வேண்டுகிறோம்.

நிவேதினி வெதுப்பகம்,
முல்லைத்தீவு.

அம்மா, ஐயா, சகோதரர்கள்

(C-4027)

## பதவி வெற்றிடம்

பிரபல நிறுவனமான AJR Multy National நிறுவனத்தில் பல்வேறு பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
இளைஞர் யுவதிகளுக்கு முன்னுரிமை. வயதெல்லை 18-தொடக்கம் கல்வித்தகைமை சாதாரண தரம்.
குறுகிய கால பயிற்சி வழங்கப்பட்டு உள்வாங்கப்படுவர்.
குறுகிய காலத்தில் சிறந்த சம்பளம் பெறலாம்.
(பதவி அடிப்படையில் வழங்கப்படும்)
வெளிநாடு சுற்றுலா வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.
தேவைப்படுவோருக்கு தங்குமிடம் இல்வசமாக வழங்கப்படும்.
(வெளிமாவட்டங்களில் உள்ளோரும் விண்ணப்பிக்கலாம்)

தொடர்புகளுக்கு:- 0778330074, 0770312092
0773327833, 0776408410

(3393)

## பிள்ளையார் இன்

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.
சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

**சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 175/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-4012)

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

17.07.2013 முதல் 22.07.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-4024)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனம் எனும் பூதம்

ஒருநாள் ஒரு மனிதன் யோகி ஒருவரைத் தேடிப் போனான். சாமி நான் உழைத்து உழைத்து மிகவும் களைத்து போனேன்.

இருந்தாலும் இன்னமும் என்னுடைய பணிகள் முடியவில்லை. மிகுதி வேலைகள் இருக்கின்றன.

அனைத்து வேலைகளையும் செய்து முடிக்கும் சக்தி எனக்குக் கிடைக்க வேண்டும். அதற்கு நீங்கள்தான் வழி சமைக்க வேண்டும்.

அந்த சக்தியை நான் உனக்கு வழங்கி வைக்கிறேன் என்றார்.

இருந்தாலும் அது உனக்கு பெரும் தொல்லையாக அமைந்து விடும் என யோகி கூறினார்.

இருந்தாலும் பரவாயில்லை சாமி.

அப்படி என்ன பெரிய தொல்லை வந்து விடப்போகிறது. நீங்கள் அதற்கான சக்தியைத் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டான்.

இவரது தொல்லை தாங்கமுடியாமல் யோகி "அருகில் வா" என்றார். அவரும் அவர் அருகில் வந்தார்.

அவனுடைய காதோடு காதாக ஒரு மந்திரத்தை உபதேசித்தார். அவர் அதை மனப்பாடம் செய்து முடித்ததும் ஒரு பெரிய பூதம் அவர் முன்னால் வந்து நின்றது.

ஐயா! நான் உங்களுக்காக அனைத்து வேலைகளையும் செய்து முடிக்கக் காத்திருக்கிறேன்.

ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் நாள் முழுவதும் இடைவிடாமல் எனக்கு ஏதாவது ஒரு வேலை கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

அப்படி எனக்கு வேலை எதுவும் தராது விட்டால், உங்களையே விழுங்கிவிடுவேன். அவ்வளவுதான் என்றது.

வேறு வழியேதும் தெரியாது சரியென ஒத்துக் கொண்டான்.

"சரி வேலையை தா" என்று கேட்டது பூதம். எனக்கு ஒரு பெரிய அழகிய மாளிகை வேண்டும் என்றான்.

அடுத்த நிமிடமே அவனது கண்முன் பெரிய மாளிகையொன்று உருவானது. எனக்கு ஒரு பெரிய தோட்டம் வேண்டும் என்றான்.

அதுவும் ஒருவாறாக உருவாகி விட்டது. குதிரை வேண்டும். யானை வேண்டும் என்றான். அவையும் வந்து நின்றது.

அவன் வழங்கிய வேலைகள் அனைத்தையும் பூதம் அடுத்த விநாடியே செய்து முடித்தது. இனிமேல் சொல்வதற்கு எதுவுமே இல்லை.

நிபந்தனையின் பிரகாரம் பூதம் இவனை விழுங்குவதற்கு அருகில் வந்தது.

இவன் உடனே ஓடிச் சென்று யோகியின் காலடியில் விழுந்தான்.

"சாமி என்னைக் காப்பாற்றுங்கள்" என்றான்.

யோகி இவனை நிமிர்ந்து பார்த்தார்.

அவனுக்கு அதற்கு ஒரு வழியைக் கற்றுக் கொடுத்தார். சரியென்று அவன் கேட்டுக் கொண்டு மாளிகைக்குப் போனான்.

அவனைத் தொடர்ந்து பூதமும் வாயைத் திறந்தவாறு பின் தொடர்ந்தது.

மாளிகை, அங்கே ஒரு இரும்புத் தூண் வேண்டுமென பூதத்திடம் அவன் கேட்டான்.

உடனே தூணும் வந்தது. அதை நன்றாக மெருகேற்றி வழவழப்பாக்கச் சொன்னான்.

அதேபோல் அதுவும் ஆக்கியது.

இப்பொழுது அவன் பூதத்திடம் "இதோ பார்! நீ என்ன செய்ய வேண்டுமென்றால் நான் நிறுத்தச் சொல்லும் வரை இந்தத் தூணில் ஏறி இறங்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்றான். பூதமும் அப்படியே செய்ய ஆரம்பித்தது.

அதன்பின் இவன் வேண்டிய பொழுதெல்லாம் அந்தப் பூதத்தை அழைத்து வேலை வாங்கிக் கொள்வான்.

இதுவொரு கதை. இக்கதை எதற்கு என்றால் மனிதனுடைய மனமும் சக்தி வாய்ந்த அவனது சிந்தனையும் இந்தப் பூதத்திற்கு இணையானது. சரியான வேலை கொடுக்கவில்லையென்றால் அது கெட்ட வழியில் செல்ல அவனைத் தூண்டி விடும்.

அதனால் மனம் எனும் பூதத்திற்கு வேலையில்லாத பொழுதெல்லாம் ஈஸ்வர தியானம் எனும் தூணை பற்றிக் கொண்டே இருக்க வேண்டுமென கூறுகிறார் சுவாமி சின்மயானந்தர்.

ஆனால் நாமெல்லாம் ஏதோவொரு தூணைப் பற்றிக் கொண்டே இருக்கின்றோம்.

ஒரு குடும்பஸ்தர் பெருமையாகச் சொன்னார்.

"நான் எப்போதும் சும்மா இருக்க மாட்டேன் சேர்! எந்நேரமும் என் மனைவி முன்னால் நின்று ஏதாவது பேசிக் கொண்டே தான் நிற்பேன்" என்றார்.

" நிறுத்தவே மாட்டீங்களா" என்றேன்.

"மாட்டேன்" என்றார்.

"ஏன்"? என்று கேட்டேன்.

"நான் நிறுத்தினால் அவள் பேச ஆரம்பித்து விடுவாளே! அதனால்தான்" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# வடமராட்சி கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்துக்குள் அமைந்துள்ள 1C தரப் பாடசாலையான யா/புற்றளை மகாவித்தியாலயத்தின் அதிபர் பதவிக்கு வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

மேற்படி அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரி இலங்கை அதிபர் சேவையின் 2-II இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I ற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

மேலும் குறித்த விண்ணப்பதாரி வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலையில் நிரந்தரமாக சேவையாற்றுவராக இருப்பதோடு அப்பாடசாலையில் குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றி இருத்தல் வேண்டும். தொடர்ந்து ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகள் கடமையாற்றக்கூடிய வயதெல்லையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இதேவேளை இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத பட்சத்தில் ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்களும் கருத்தில் கொள்ளப்படும் என தெரிவிக்கப் படுகிறது.

இவ் அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை வடமராட்சி வலயக்கல்வி அலுவலக கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையம் மற்றும் கல்வி வளர்ச்சிக் கழகம், விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்தும் கல்விச் சாதனையாளர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஸ்ரீ ஞானவைரர் ஆலய முன்றலில் சனசமூக நிலையத் தலைவர் கு.முருகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கௌரவிப்பு விழாவில் பிரதம விருந்தினர்களாக வவுனியா பிரதேச மின்பொறியியலாளர் கட்டமைப்புப் பகுதி உத்தியோகத்தர் மார்க்கண்டு விஜயசிறி மற்றும் அவரது பாரியார், ஓய்வு பெற்ற கிளிநொச்சி காணி உத்தியோகத்தர் நாகமுத்து நமசிவாயம் மற்றும் அவரது பாரியார் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐயாத்துரை நாகேஸ்வரன், வடமாகாண வள்ளுவன் மேம்பாட்டுக்கழக தலைவர் அசோக் மோகன்ராஜ் றம்சன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஸ்ரீஞானவைரவர் ஆலய பரிபாலன சபை தலைவர் சுப்பிரமணியம் சுதாகரன் மற்றும் அவரது பாரியார், ஸ்ரீஞானவரவர் ஆலய விசேட பூங்காவின் குழுத் தலைவர் கந்தையா லவேந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இவ்விழாவுக்கான ஆசியுரையை ஸ்ரீஞானவைரவர் ஆலயக்குருக்கள் வழங்கவுள்ளார்.

மேற்படி நிகழ்வுகள் கடந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்தோர், கடந்த ஆண்டு க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தோர், பல்கலைக்கழகம் 2007 முதல் 2012 வரையான ஆண்டுக்குள் கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெற்றோர் ,2007 முதல் 2010 வரையான ஆண்டுக்குள் வெளி வாரிப்பட்டம் பெற்றோர், 2007 முதல் 2013 வரையான ஆண்டுக்குள் பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தொடர்ந்து தமிழ் அறிவு , சமய பாட பரீட்சையில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு விழாவும், தெய்வீகக் கலைவிழா கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-160 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 | 120 |
| தக்காளி | 100 | 150 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 60 | 40 |
| கோவா | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 100 | 140 | 140 |
| பூசணி | 25 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 250 | 170 | 200-240 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 100 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | – | 120 |
| பயற்றங்காய் | 40 | 40 | 80 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 100 | 160 | 300 | 200 |
| போஞ்சி | 140 | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | – | – |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 120 |

# இராசி பலன்

17.07.2013
(ஆடி 01, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
நவமி பிற்பகல் 2.23 மணிவரை
சுவாதி பிற்பகல் 4.43 மணிவரை
இராகுகாலம் 12.00-1.30 மணிவரை
சுபநேரம் 4.30-6.00 மணிவரை

**மேடம்** வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம்,கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், உடல்நலம் சீராகும், கௌரவமான நாள்.

**இடபம்** செய்தொழில் மேன்மையுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், முயற்சிகள் பலிதமாகும்.

**மிதுனம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், பிள்ளைகள் நலன்கருதி சில செலவுகளை எதிர்கொள்ள நேரிடலாம்.

**கடகம்** மங்கல ஓசை மனதில் கேட்பதற்கான அறிகுறி தோன்றும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**சிங்கம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், கௌரவம் அந்தஸ்து உயர்வடையும், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி** வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், பணியாளர் தொல்லை அகலும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** பக்குவமாகப்பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுபசெலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலன் கிடைக்கும், ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள்,மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விலையுயர்ந்த பொருட்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், செலவுகளுக்கேற்ப பணம் வந்து சேரலாம், கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களால் நன்மையுண்டு, போசன நன்மையுண்டு.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, திட்டமிட்ட காரியங்கள் நடைபெறலாம்.

**மீனம்** எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், குடும்பத்தில் சிறு சிறு வாக்கு வாதம் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்தை மீறிய நபர்களுக்கு அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சி பருத்தித்துறை பிரதேசத்தில் போக்குவரத்து விதிகளைமீறி மோட்டார் சைக்கிள் செலுத்திய மூன்று நபர்களுக்கு 13 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் வெவ்வேறு வழக்குகளுடன் தொடர்புடைய மூன்று நபர்கள் தமது மோட்டார் சைக்கிள்களை வீதியில் செலுத்திச் சென்றபோது போக்குவரத்து விதிகளை மீறியதாக போக்குவரத்து பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் மேல் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கு நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் மூன்று நபர்களும் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் ஒரு நபருக்கு காப்புறுதிப்பத்திரம் இன்றி செலுத்தியமைக்கு 7ஆயிரத்து 500 ரூபாவும் மற்றைய இரு நபர்களுக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமைக்கு 6 ஆயிரம் ரூபாவும் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (அ-ம-24)



நன்றி:-ஐலண்ட்

# வடக்கு மாகாணசபை தேர்தலுக்கு முன்னர் வலி.வடக்கு விடுவிக்கப்படவேண்டும்

## அல்லது போராட்டம்தான்; மீள்குடியேற்ற குழு எச்சரிக்கை

**வலிகாமம் வடக்கு பிரதேசம் வடக்கு மாகாண தேர்தலுக்கு முன்னர் விடுவிக்கப்படல் வேண்டும். இல்லையேல் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென வலி.வடக்கு மீள்குடியேற்றக்குழு எச்சரித்துள்ளது.**

வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வு தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பொன்றை யாழ். ஊடக அமையத்தில் வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுத் தலைவரும் வலி.வடக்கு பிரதேச சபையின் உபதலைவருமான எஸ். சஜீவன் நேற்று நண்பகல் 12 மணியளவில் நடத்தியிருந்தார்.

இச்சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிகாமம் வடக்கில் ஒரு இலட்சத்து 12 ஆயிரம் பரப்புக்காணிகள் இராணுவத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

அந்நிலங்களுக்கு உரிமையான மக்கள் அனைவரும் 25 வருடங்களுக்கு மேலாக முகாம் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் எந்த அரசியல்வாதிகளும் அம்மக்களின் மீள்குடியேற்றத்திற்காக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

மீள்குடியேற்றம் என்றபெயரில் பல காலங்களாகவும் தற்போதும் எமது மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டே வருகின்றனர்.

இராணுவம் அம்மக்களின் நிலத்தை பிடித்து வைத்துள்ளமையால் இன்றும் அங்கு 46 முகாம்களில் தமது வாழ்வை துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷவை வீதியின் இருமருங்கிலும் நின்று வரவேற்பதற்கும் பேரணிகள், ஊர்வலங்களில் வீதிகளில் நடந்து செல்வதற்குமே எமது மக்களைப் பயன்படுத்துகின்றனரே தவிர, இம்மக்களின் துன்பத்தை போக்குவதற்கு யாரும் நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

முகாம்களுக்குள் முடங்கி துன்பமே வாழ்வாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு நடவடிக்கை எடுக்க தவறிவிட்டனர்.

எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக எமது நிலம் விடுவிக்க படல் வேண்டும். அல்லது நாம் ஒன்று கூடி தீர்மானம் எடுப்போம். அது போராட்டமாகவும் இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# கம்பன்கழக ஏற்பாட்டில் நிலாக்கால நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கம்பன் கழகம் நடத்தும் நிலாக்கால நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கை திருமதி ஐ.சண்முகலிங்கம் ஏற்றிவைக்கவுள்ளார்.

இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராகப் பங்கேற்கும் **இன்று பாரதி வந்தால் எதனைப் பெரிதும் வலியுறுத்துவான்** என்ற தலைப்பிலான பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

இதில் **பெண் விடுதலை** என்ற தொனிப்பொருளில் இரா.செல்வவடிவேல், ச.லலீசன் ஆகியோரும் **மொழிப்பற்று** என்ற தொனிப்பொருளில் ந.விஜயசுந்தரம்,அ.வாசுதேவா ஆகியோரும் **சமுதாய உணர்வு** என்ற தொனிப்பொருளில் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், ச.மணிமாறன் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். (அ-5)

# தமிழ்பேசும் படைப்பாளிகள் இலக்கிய சந்திப்பை புறக்கணிக்க வேண்டும்

## வலி. வடக்கு மீள்குடியேற்றக்குழு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியத்துக்கு மதிப்பளிக்காது யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 20, 21ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 41 ஆவது இலக்கியச் சந்திப்பை புறக்கணிக்குமாறு வலி.வடக்கு மீள்குடியேற்றக்குழு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னியில் நிகழ்த்தப்பட்ட மாபெரும் மனிதப் படுகொலையின் குருதிமணமும் அவலக் குரல்களும் தமிழர்களின் மனங்களை விட்டு இன்னும் மறையாத நிலையில், தமிழர்களின் அரசியல், வாழ்வுரிமை, கலை, பண்பாட்டுக் கூறுகளைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் அரசு இறங்கியுள்ளது.

தமிழ் அரசியல்வாதிகளை வைத்தே தமிழர்களுக்கு பிரச்சினையில்லையென்ற அபிப்பிராயத்தை உருவாக்குதல், தமிழர்களின் பாரம்பரிய பூமியான ஒன்றிணைந்த வடக்கு- கிழக்கு மாகாணங்களைப் பிரித்ததுடன் குடிசனப் பரம்பலைச் சிதைக்கும் வகையிலான சிங்களக்குடியேற்றங்கள், பண்பாட்டு வேர்களின் மீது நிகழ்த்தப்படும் நுண்தாக்குதல்கள், மதத் தலங்களை அழித்தல் என எல்லா அடையாளங்களையும் இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளில் அரசு இறங்கியுள்ளது.

நமது வரலாற்று துயரம் என்னவெனில், இந்த நடவடிக்கைகளை தமிழ்மக்கள் மத்தியிலுள்ள சலுகை அரசியலுக்கு பலியான சிலரை வைத்தே அரசு நடத்திக்கொண்டிருப்பதுதான்.

இதன் தொடர்ச்சியாக தமிழர்களின் கலை, இலக்கிய வெளிப்பாடுகளிலும் அரசு கைவைத்துள்ளது. இப்பொழுது தனது ஆதரவாளர்களைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 41ஆவது இலக்கியச் சந்திப்பு என்ற ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளது.

யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள், சட்டத்திற்கு அப்பாலான ஆட்சி, ஊடக அடக்குமுறைகள் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் மீதான அடக்குமுறை என்பவற்றின் மீது போர்த்தப்படும் பல்வேறு திரைகளிலொன்றாகவே இந்தச் சந்திப்பையும் நோக்கவேண்டியுள்ளது.

ஏனெனில் யார் யாரெல்லாம் இலக்கிய சந்திப்பின் ஏற்பாட்டாளர்களாகவும் அமைப்பாளர்களாகவும் உள்ளார்கள் என்பதிலிருந்து அதனைப் புரிந்துகொள்ள முடிகிறது.

படைப்பாளிகள் தமது அனுபவங்களை எழுதுவதும் பேசுவதும் இலங்கையின் நிலைவரங்களைப் பொறுத்தது. யுத்தத்தின் பின்னர் இலங்கையில் நடத்தப்பட்ட எழுத்தாளர் விழாக்கள் எல்லாமே வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவைதான். இலங்கையர்களால் நடத்தப்பட்டவையல்ல.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு வெளியிலிருந்து வருவதை அடியோடு நிராகரிக்கும் இலங்கையரசு, தமிழர்கள் இயல்பாக வாழ்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்கான விழாக்களை மட்டும் இறக்குமதி செய்வது வேடிக்கையானது.

யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள இந்தக் கலை இலக்கிய விழாவில் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஆளுமைகளின் பங்களிப்பை கோராததன் மூலமும் இது உள்நோக்கமுடைய சந்திப்பென்பதனைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

அரசின் திரை மறைவிலான இந்த முயற்சிகளை முறியடிப்பது ஒவ்வொரு படைப்பாளிகளினதும் வரலாற்றுக்கடமை. போராட்டமென்பது களங்களுக்குச் செல்வது மட்டுமல்ல. சில இடங்களுக்குச் செல்லாமலிருப்பதும்தான். ஆகவே இந்த நிகழ்வைப் புறக்கணிக்குமாறு தமிழ்பேசும் படைப்பாளிகளை கேட்டுக்கொள்கிறோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)




# களவாடிய குற்றச்சாட்டில் இளைஞர் கைதானார்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் செல்லமுத்து புடைவையகத்தில் புடைவைகளைக் களவாடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கொடிகாமம் வீதியில் வைத்து நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்குறித்த புடைவையகத்திற்கு சென்ற அவ் இளைஞர் புடைவையை களவாடி தப்பிச் சென்றவேளை வீதிப்போக்குவரத்துப் பணியில் ஈடுபட்ட பொலிஸாரால் விரட்டிச்செல்லப்பட்டு கொடிகாமம் வீதியில் வைத்து கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

நெல்லியடி நகரப்பகுதியில் துவிச்சக்கர வண்டிகளைக் களவாடுதல், கடைகளில் பொருட்களைக் களவாடுதல், கைப்பைகளைப் பறித்தல் போன்ற சிறுசிறு திருட்டுச் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-24)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விரும்பிய வாக்குச்சாவடியில் வாக்களிக்க அனுமதி

## தேர்தல் செயலகம்

(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் வாக்காளர்கள் எந்த வாக்குச் சாவடியிலும் வாக்களிப்பதற்கான அனுமதியைப்பெற முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்களில் வாக்காளர் ஒருவர் அவர் வசிக்கின்ற பிரதேசத்துக்குரிய வாக்குச்சாவடியிலேயே வாக்களிக்க முடியும் என்ற நிலை இதுவரையில் காணப்பட்டது.

எனினும் தகுந்த காரணங்களை சுட்டிக்காட்டி அவர் மாற்று வாக்குச்சாவடி ஒன்றில் வாக்களிப்பதற்கு அனுமதி பெற முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் சட்டத்தின் 1993 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட ஏழாம் இலக்க சட்டத்தின் 125 ஏ சரத்தின் கீழ் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



அன்புடையீர்

கடந்த 19.04.2013 அன்று லண்டனில் சிவபதமடைந்த எமது குடும்பத்தின் மூத்த மகன்

**அமரர் மகாதேவன் (மகான்) சதீஸ்குமார் (லண்டன்)**

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் எதிர்வரும் 18.07.2013 வியாழக்கிழமை காலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்வில் தாங்களும் குடும்ப சகிதம் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்திபெற வேண்டுவதோடு அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வல்லை வீதி.
தொண்டைமானாறு.

தகவல்: குடும்பத்தினர்.
சித்தப்பா (ஜெயக்கொடி)

(சி-4026)

# மரண அறிவித்தல்

## இரத்தினசபாபதி சியானி



6 ஆம் வட்டாரம் மு/வித்தியானந்த கல்லூரி 2015 உயர்தர விஞ்ஞான பிரிவு மாணவி குமுழமுனை முள்ளியவளையைச் சேர்ந்த இரத்தின சபாபதி சியானி 15.07.2013 அன்று காலமானார்.

அன்னார் இரத்தினசபாபதி (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் - துணுக்காய்), கமலரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மகளும் மயூரி, நிர்சிகா, அம்சிகா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற தம்பையா சரஸ்வதி காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லம்மா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

கந்தையா (பொறியியலாளர் - லண்டன்), புஸ்பறஞ்சிதம் (லண்டன்), ஆகியோரின் பெறாமகளும் நாகரத்தினம் (ஸ்ரீபத்மநாதன் (லண்டன்) ஸ்ரீ புஸ்பநாதன் (அதிபர்), ஸ்ரீகமலநாதன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.07.2013 இன்று 10 மணிக்கு குமுழமுனை இல்லத்தில் நடைபெற்று குமுழமுனை இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப் படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
0774466022

# உள்ளத்தால் பாராட்டி வாழ்த்துகின்றோம்





2013.07.15 அன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மாணவர் ஊக்குவிப்பு நிதி வழங்கி கல்விக் கண்ணைத் திறந்திட புறப்பட்ட ஏழைகளின் காவலன் சகோதரர் அல்ஹாஜ் என்.எம். சிராஸ் அவர்களது சேவையை மனதார வாழ்த்துகின்றோம்.

(J.P) JM முஜாகித் எம்.றொசந் SM ஜபிர்,
யாழ்.முஸ்லிம் சமூகம்

(3384)

# உளமார வாழ்த்துகின்றோம்




2013.07.15 அன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மாணவர் கல்விக்காய் ஊக்குவிப்புத் தொகையை வங்கியில் வைப்பிலிட்டு வங்கிப் புத்தகத்தை வழங்கி எதிர் கால வாழ்விற்கு உதவிட புறப்பட்ட சமூக சேவையாளர் என்.எம்.சிராஸ் அவர்களை வாழ்த்துகின்றோம்.

சிவகுமார், நிரேசன் பாபு
நாவாந்துறை

(3385)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாதம் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

நல்லதொரு செயலைச் செய்யும்போது உணர்ச்சிகள் அறிவின் தீர்ப்பை அழித்துவிடாமல் கவனித்துக் கொள்வீர்கள். மனித சமுதாய நன்மைக்கான விடயங்களையும் பயன்படும் உண்மைகளையும் கண்டு பிடித்தாக வேண்டும் என்றும் அவற்றைச் சமுதாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் நீங்கள் ஆசைப்படுவீர்கள்.

நீங்கள்தான் உண்மையில் ஒரு ஜனநாயகவாதியைப்போல் செயல்முறையில் விளங்குவீர்கள். எதையும் சிறப்பாகவும் சீராகவும் அமைப்பதையும் பலருக்குப் பயன்படும் விதத்தில் செய்ய வேண்டும் என்ற ஆவல் உங்களுக்கு அதிகரிக்கும். எந்தக் காரியத்தை எந்தச் சமயத்தில் செய்தால் அதிகமான பயன்களைப் பெறமுடியும் என்பதைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்துச் செயலாற்றும் இயல்பு உங்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும்.

நிகழ்கால நிகழ்ச்சிகளில் கவனமும் அக்கறையும் உங்களுக்கு இருந்தாலும் எதிர்காலத்தில் எதிர்பார்க்கத்தக்க விடயங்களைக் குறித்தும் மனித சமுதாயத்திற்கு நாம் எந்த வகையில் பயன்பட முடியும் என்பதைக் குறித்தும் நீங்கள் அவ்வப்போது சிந்திப்பீர்கள்.




உங்கள் இதயத்தின் தணியாத வேட்கையும் தளராத் தன்னம்பிக்கையும் வளர்ந்து வரும். உங்களுடைய தற்காலச் சூழ்நிலைகளும் நிகழ்ச்சிகளும் சம்பவங்களும் எவ்வளவுதான் தொல்லை கொடுத்தாலும் நீங்கள் நீதியிலிருந்தும் நேர்மையிலிருந்தும் தவறாமல் இருப்பதற்கே முயல்வீர்கள். உங்களைச் சூழ்ந்துள்ளவர்களுக்கும் உங்கள் குடும்பத்தில் உள்ள சிலருக்கும் மிகவும் நரம்புத் தளர்ச்சியோ உணர்ச்சி வயப்படக் கூடிய தன்மையோ காரண காரியமின்றித் தொல்லை தரும் போக்கோ ஏற்படக் கூடும். ஆனாலும் நீங்கள் அமைதியை நாடி உங்கள் வாழ்வின் போக்கை அமைத்துக் கொள்வீர்கள். நீங்கள் சகோதரர், தோழர்களுடன் மகிழ்ச்சியாக இருப்பதைப் பெரிதும் விரும்புகிறீர்கள். பந்துமித்திரர்களுடன் வாழ்ந்தாலும் தானதர்மம் செய்வதில் இயல்பான கருணை உள்ளம் ஓரளவு உங்களுக்கு அமைந்திருக்கும்.

நீங்கள் ஆசார அனுஷ்டானத்தை கடைப்பிடிக்க விரும்புவீர்கள். உண்மையே பேச வேண்டும் என்பதில் அக்கறையும் கொள்வீர்கள். சிறிது காலம்தான் பிறந்த வீட்டில் இருப்பீர்கள்.

பின்னர் தேச சஞ்சாரம் செய்ய வேண்டி வருவதும் உண்டு. உங்களிடம் பலருக்கு சின்ன வயதிலும் வாலிப்பத்தில் பலமும் வீரியமும் குன்றக் கூடும்.

கவிபாடுவதிலும் கவிதை இயற்றுவதிலும் ஆர்வம் பிறக்கும். நல்ல பராக்கிரமசாலியாகவும் விளங்குவீர்கள். நல்ல செல்வ வளமும் பணியாட்கள் பலர் பணி செய்யக் கூடிய பதவியையும் அடைவீர்கள்.

மந்திர தந்திர ஜந்திர தொழில் நுட்பங்களில் உங்களுக்கு அறிவியல் ரீதியான நுணுக்கத் திறமைகள் விருத்தியடையும். உங்களுக்கு அரசியல் வாதிகள், அரசாங்கத்தின் போக்கு ஆகியவற்றில் அதிருப்தியும் விரக்தியும் உண்டாகலாம். உங்களில் சிலர் பகைவர்களின் கர்வத்தையும் பெண்களின் பெண்மையையும் பலாத்காரத்தாலோ அல்லது பொருள் வலிமையாலோ அழித்துப் பின்னர் அது குறித்து வருந்தும் படியும் நேரலாம். நீங்கள் சில சமயங்களில் கஷ்டப்பட்டே பொருள் சம்பாதிக்க வேண்டி இருக்கும். சிலருக்கு வீட்டில் தனம் தங்காது. நாளடைவில் வீரியம், தனம், பலம் விருத்தியடையவும் கூடும்.

உங்களுக்கு ஆயுள் தீர்க்கமாக இருக்கும். நாடு விட்டு நாடு சென்றோ அல்லது அந்நிய ஊர்களில் இருந்தோ அந்நியர் மூலமாகவோ செல்வ வருமானம் உண்டாகக் கூடும். உங்கள் மாமாவுக்கு கஷ்டங்கள் சம்பவிக்கலாம்.

மனைவியால் சிலவகை துக்கங்கள் ஏற்படவும் கூடும். மனைவி நல்ல நடத்தை உடையவளாகவும் உங்கள் தனிப்பட்ட ஜாதக கிரக நிலையைப்பொறுத்து அமைவதால். நீங்கள் உங்கள் மனைவியை திருப்திப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். உங்கள் மனைவி உங்கள் பேச்சைக் கேளாதவளாகவும் இருக்கக் கூடும். கேட்டாலும் தன் மனம் போனபடி நடந்து கொள்வாள்.

(தொடரும்)

# வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் பங்கேற்பை அரசே தீர்மானிக்கும்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

**பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சியின் *நோ பயர் ஸோன்* என்ற இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான ஆவணப்படத்தின் இயக்குநரான கெல்லம் மக்ரே இலங்கைக்கு வருவதில் தடை விதிக்கப்படமாட்டாது என ஊடக அமைச்சரான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றது. இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்குச் செய்தி சேகரிப்பதற்காக இங்கு வரக்கூடிய சர்வதேச ஊடகவியலாளர்களை உள்ளே அனுமதிப்பது தொடர்பில் அரசே இறுதியாகத்தீர்மானிக்கும்.

சனல்-4 ஊடகவியலாளர் கெல்லம் மக்ரே, பிபிசி ஊடகவியலாளர் பிரான்சிஸ் ஹரிசன் போன்றோர் இலங்கைக்குள் வர அனுமதிக்கப்படுவார்களா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உரிய நியதிகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் விண்ணப்பிக்கும் அனைத்து ஊடகவியலாளர்களும் நாட்டுக்குள் பிரவேசிக்க முடியும்.எவ்வாறெனினும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு அனுமதியளிப்பது தொடர்பில் அரசாங்கமே இறுதித் தீர்மானம் எடுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் கெல்லம் மக்ரே இலங்கைக்கு வருவதற்கு விசா வழங்கக்கூடாது என இலங்கையின் இராஜதந்திரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கோரி வருவதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)



யா/ இடைக்காடு மகா வித்தியாலயத்தில் தரம் 12 இல் கணிதப் பிரிவில் கல்வி கற்கும் செல்வி தீபிகா தங்கவேல இவ்வருடம நடைபெற்ற தமிழ்தினப் போட்டியில் பிரிவு 5 இல் இலக்கிய திறனாய்வு நிகழ்ச்சியில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். அம்மாணவி பாடசாலை சார்பாக கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.


# டுபாயில் பேருந்து விபத்து; இலங்கையர் உட்பட மூவர் பலி!

## 16பேர் காயம்

டுபாய் புஜைரா நகரில் இடம் பெற்ற பேருந்து விபத்தில் இலங்கை பிரஜை உட்பட மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 16 பேர் காயமடைந் துள்ளதாகவும் டுபாய் பொலிஸார் தெரிவித்தனர்.

புஜைரா நகரில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் கடந்த சனிக் கிழமை காலை இடம்பெற்ற குறித்த விபத்தில் இரண்டு பங்களாதேஷ் பிரஜைகளும் ஒரு இலங்கை பிரஜையும் கொல்லப்பட்டனர் என்று புஜைரா நகர பொலிஸார் உறுதிப்படுத்தியுள் ளனர்.துப்புரவு செய்யும் நிறுவனம் ஒன்றில் தொழில்புரியும்19பேரைபேருந்து ஏற்றிச் செல்லும் வழியிலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

பேருந்தை சாரதி வேகமாக செலுத்திச் சென்றுள்ளார். இதனால் வேகக் கட்டுப்பாட்டை யிழந்த பேருந்து நடை பாதையில் மோதி விபத்துக்குள்ளானது என்று விசாரணைகளை நடத்திய பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். சம்பவத்தில் மூன்று பேர்ஸ்தலத் திலேயே உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் அவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-2)



சுதுமலை வடக்கு - ஈஞ்சடி

## அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகை சமேத ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான தேர்த்திருவிழா

இவ் இலங்கா தீபத்தில் வடபால் யாழ்ப்பாண நன்னகரில் வடமேற்கில் சகல வளங்களும் நிறைந்திருக்கும் சுதுமலைக் கிராமத்தில் ஈஞ்சடி எனும் திவ்விய தலத்திலே கோயில் கொண்டு எழுந்தருளும் ஞானசொரூபியான சாமுண்டாம்பிகா சமேத ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் தேர்த் திருவிழா

*17.07.2013 ஆடித் திங்கள் முதலாம் நாள் புதன்கிழமை*

| | |
|---|---|
| அபிஷேகம் | : மு.ப. 8 மணி |
| வசந்த மண்டப பூசை | : மு.ப. 10 மணி |
| தேரில் ஆரோகணித்தல் | : நண்பகல் 12 மணி |
| பச்சை சாத்துதல் | : பி.ப. 2மணி |
| உற்சவ குரு | : வேத சிவாகம கிரியாபானு சிவஸ்ரீ சிவகுமாரராஜ குருக்கள் |

தேர் உற்சவத்தின்போது அடியார்கள் வருகைதந்து ஈஞ்சடி ஞானவைரவப் பெருமானின் திருவருளை பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**ஈஞ்சடி ஞானவைரவர் தர்மகர்த்தா சபையும்**
**தேர்த்திருவிழா உபயகாரரும்.**

(சி-4011)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் 53 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பர்

## நம்புகின்றோம் என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

**எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் 53 நாடுகளினதும் அரச தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு இருக்கின்றது.**



இம் மாநாட்டில் கலந்துகொள்ளமாட்டோம் என்று எந்தவொரு நாடும் இதுவரை அறிவிக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளுக்கான ஏற்பாட்டு நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களைத் தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் மேலும் கூறியதாவது,

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு நடைபெறுவது என்பது பாரிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். யுத்தத்தின் பின்னரான இலங்கையின் கள நிலைமைகளை நிதர்சனமாகக் காண்பதற்கு உலகத் தலைவர்களுக்கு சிறந்த சந்தர்ப்பம் இதன்மூலம் கிடைக்கும்.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடைபெறுவது என்பது நாம் பெருமையடையக்கூடிய விடயமாகும்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடைபெறும் இந்த மாநாட்டின் ஊடாக எமது நாடு பாரிய முக்கியத்துவமான நிலையை சர்வதேச மட்டத்தில் அடையவுள்ளது.

குறிப்பாக அடுத்த இரண்டு வருடங்களுக்கு இலங்கையே பொதுநலவாய நாடுகளின் தலைமைத்துவத்தை வகிக்கவுள்ளது.

இது எவ்வித சந்தேகமுமின்றி சர்வதேச மட்டத்தில் எமக்கு சிறந்த முக்கியத்துவத்தை ஏற்படுத்தும் மாநாடாகும். 1976 ஆம் ஆண்டு அணிசேரா நாடுகள் மாநாடு இந்த நாட்டில் நடைபெற்றதன் பின்னர் நடைபெறும் விசாலமான மாநாடு பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு என்றே கூறலாம்.

அத்துடன் 24 வருடங்களின் பின்னர் ஆசிய நாடு ஒன்றுக்கு இந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளமை தொடர்பில் நாம் பெருமையடையலாம்.

பொதுநலவாய நாடுகளின் அர்ச தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் அரசாங்க மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## தூதுவளை

Botanical Name- Solamum trilobatum
Family- Solanaceae
Engl- yellow berried night shade
Sinh- Kotuwel-batu

நெருக்கமான வளைவுகளையுடைய இக்கொடி முட்களையுடையது. வளைந்த முட்கள் கொடி, இலை, காம்பு, பூக்காம்பு ஆகியவற்றில் நெருக்கமாக இருக்கின்றன. சுமார் 2-7 செ.மீ. நீளமும் 2-5 செ.மீ.அகலமும் உள்ள இலை சிறிது தடிப்புடையது. நல்ல பசுமை நிறமுடைய இலையின் இரு ஓரங்களிலும் இலை சிறிது பிளவுபட்டு சிறிது நீண்டிருப்பதைக் காணலாம். பூக்களில் 5 ஊதா நிற இதழ்களையும் நடுவில் நன்கு நீண்டுள்ள மஞ்சள் நிற 5 மகரந்தக் காம்புகளையும் காணலாம். கொத்து கொத்தாக பூக்கும் பழம் நல்ல சிவப்பானது. சில ஆண்டுகள் வரை உயிர்வாழும்.

யாழ்.மாவட்டத்தில் பொதுவாக கைவிடப்பட்ட தரிசு நிலங்களிலும் உவர் மண் சேர்ந்த பகுதிகளிலும் தானாக முளைத்து வளருவதைக் காணலாம். கைதடிவெளி, நாவற்குழி, சரசாலை, கோப்பாய் போன்ற இடங்களில் இதன் பரம்பல் இயற்கையாக அதிகம். ஆனாலும் எல்லா வகை மண்களிலும் பயிராக்கலாம். தானாக முளைத்துள்ள சிறு கன்றுகளைப் பிடுங்கி நட்டும் விதைகளைத் தூவி பயிரிடலாம்.

**100 கிராம் இலையிலுள்ள சத்துக்கள்**
ஈரலிப்பு - 84.7 கிராம்
பொஸ்பரஸ்- 52 மி.கி.
புரதம்- 3.9 கிராம்
இரும்பு- 5.0 மி.கி.
கொழுப்பு -0.7 கிராம்
நார்- 2.3 கிராம்
காபோவைதரேற்று- 4.6 கிராம்
கல்சியம்- 334 மி.கி.

**மருத்துவ குணங்கள்**

தூதுவளைக் கீரையை அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டு வந்தால் அஜீரணக் கோளாறுகள் குணமாகும்.

தூதுவளைப் பூவை பாலில் போட்டு காய்ச்சிக் குடித்தால் ஆஸ்துமா குணமாகும். வாரத்தில் 3 நாட்கள் பயன்படுத்தலாம்.

தூதுவளைக் கீரையுடன் (50 கிராம்) மிளகு 5 சேர்த்து நன்றாக அரைத்து 2 லீற்றர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து பின்னர் அதில் பால் மற்றும் சீனி சேர்த்து குடித்தால் தும்மல் குணமாகும்.

தூதுவளைக் கீரையைப் பூண்டு சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் இரத்த ஓட்டம் சீராகும்.

தூதுவளைக் கீரையை நன்றாக அரைத்துச் சாறு எடுத்து மிளகுத்தூள் மற்றும் தேன் கலந்து குடித்தால் நன்றாக பசி எடுக்கும்.

தூதுவளைக் கீரைச் சாற்றை 30 மில்லி அளவில் தினமும் காலையில் குடித்து வந்தால் அதிகப்படியான கொழுப்பு கரையும்.

தூதுவளைப் பூக்கள் (5), ஆட்டுப்பாலில் (100 மில்லி) போட்டுக் கொதிக்க வைத்து இறக்கி 45 நாட்களுக்கு குடித்து வந்தால் நரம்புத் தளர்ச்சி குணமாகும். தூதுவளைக்



கீரையின் மேல் இருக்கும் முள்ளை நீக்கி நன்றாக அரைத்து பச்சரிசியுடன் கலந்து காயவைத்து அரைத்து அடை செய்து சாப்பிட்டு வந்தால் இளைத்த உடல் பெருக்கும்.

தூதுவளைக்கீரை (3), சித்தரத்தை (1துண்டு), உலர்ந்த திராட்சை (10) ஆகியவற்றை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து பாதி எலுமிச்சைச்சாறு பிழிந்து குடித்தால் இருமல் குணமாகும்.

பழங்களை உலர்த்தி தூள் செய்து அத்தூளை நெருப்பில் இட்டு வரும் புகையை நுகர தலைப்பாரம் தணியும். மார்புச் சளியும் இளகும்.

பழங்களை சேகரித்து உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு தேனுடன் கலந்து 15 நாட்கள் சாப்பிட்டு வர மார்புச்சளி இளகி வெளியாகும். கசநோயாளர்களுக்கு சிறந்தது.

இலைகளை சேகரித்து நடுநரம்பு நீக்கி நெய்விட்டு வதக்கி உப்பு, புளி, காரம் சேர்த்து துவையலாக அரைத்து சோறுடன் உண்டால் பசி உண்டாகும். அஜீரணம் நீங்கும்.

தூதுவளையின் வேரை வெட்டி சிறு துண்டுகளாக்கி நீர் சேர்த்து சட்டியிலிட்டு சுண்டக் காய்ச்சி காலை, மாலை 30 மில்லி லீற்றர் அருந்திவர சளி, இருமல், ஆஸ்துமா குணமாகும். 25 கிராம் இலை, 20 கிராம் தேங்காய் துருவல், 80 கிராம் தானிய மாவுடன் சேர்த்தும் இன்னொரு விதமான அடை தயாரித்து சாப்பிடலாம். இது இருமலுக்கு சிறந்த நிவாரணியாகும்.

தூதுவளை இலைகளை நெய்யில் வதக்கி வெங்காயம் சேர்த்து சாப்பிட ஆஸ்துமா குணமாகும்.

தூதுவளை இலைகளை நிழலில் உலர்த்தி பொடித்து திப்பிலியையும் சம அளவு எடுத்து பொடித்து கலந்த பொடியில் 2 கிராம் அளவு வாயில்போட்டு மென்று வெந்நீர் அருந்தி வூர பசி எடுக்கும். வயிற்று பொருமல் நீங்கும். சளியும் நீங்கும்.

தூதுவளைக்கீரைச் சாற்றில் அதிமதுரத்தை ஊற வைத்து உலர்த்தி பொடியாக்கி தினமும் 2 கிராம் பொடியை தேனில் குழைத்து சாப்பிட்டால் தொண்டைச்சதை (Tonsilitis) குணமாகும்.

### தூதுவளைக்காய் மோர் வற்றல்

தேவையான பொருள்

புளித்த மோர் அரைப்படி, தூதுவளை ஒரு படி, உப்பு தேவையான அளவு, மஞ்சள் பொடி கலருக்கேற்ப, மிளகுத் தூள் பதினைந்து கிராம், வெந்தயம் பத்து கிராம், பெருங்காயம் பத்து கிராம்.

**செய்முறை**


ஒரு ஜாடியில் தூதுவளைக் காயை இலேசாக தட்டி நீரில் அலசி நீர் சுத்தமாக வடிந்ததும் போடவும். மோரை ஊற்றவும். மிளகுத்தூளைப் போடவும். மஞ்சள் பொடியை போடவும். வெந்தயம், பெருங்காயம் இவற்றை வறுத்து பொடி செய்து போடவும். உப்பை போடவும். இரண்டு நாட்கள் ஊற விட்டு மூன்றாம் நாள் மோரை நன்றாக வடியவிட்டு காயப்போடவும். இரவு மோரில் காயப்போட்ட காய்களைப் போடவும். நன்று குலுக்கி விட்டு வைக்கவும். மறுநாள் காயப்போடவும். இவ்வாறு நன்கு காயப்போட்டு போத்தல்களில் எடுத்து வைத்திருந்து விட்டு பசுநெய்யில் பொரித்து தூள் செய்து நெய் கலந்து சாதத்தில் போட்டு பிசைந்து சாப்பிடவும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

### தூதுவளை சூப்

**தேவையான பொருள்**

வெண்ணெய் 10 கிராம், தூதுவளை நான்கு கைப்பிடி, வெங்காயம் கால் கப், துவரம் பருப்பு 50 கிராம், பட்டை ஒரு துண்டு, பூண்டு 10 பல், மஞ்சள் ஒரு துண்டு, காய்ந்த மல்லி மூன்று ஸ்பூன், உப்பு தேவையான அளவு, மிளகு அரை ஸ்பூன்



**செய்முறை:-**

முதலில் அம்மியில் வரமல்லியை சன்னமாக அரைக்கவும். சோம்பு வைத்து அரைக்கவும். தேங்காயை பால் எடுக்கவும். தூதுவளையை அலசி அரிந்து வேக விடவும். அதில் அரைத்த விழுது, மஞ்சள் பொடி, உப்பு, வெங்காயம் பாதி அளவு போடவும். பருப்பை வேகவைத்து கரகரப்பாக கடைந்து வெந்த தூதுவளையில் சேர்க்கவும். வாணலியை அடுப்பில் ஏற்றி அதில் வெண்ணெயை போட்டு ஓமம், பூ, பட்டை போட்டு ஓமம் வெடித்து பட்டை சிவந்ததும் சீரகம், இஞ்சி இவற்றை விழுதாக அரைத்து பின்னர் பூண்டை கரகரப்பாக அரைத்து வாணலியில் போடவும். வெங்காயம், தக்காளி போட்டு கிளறி சூப்பை ஊற்றி கிளறி விடவும். இறக்கி வைத்து தேங்காய் பால் , மிளகு போட்டு நன்கு கலக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவின் மோசமான நாடாக இலங்கை மாறி வருகின்றது

## கயந்த கருணாதிலக எம்.பி. கொதிப்பு



(கொழும்பு)

**ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கை மாறி வருகின்றது என அரசாங்கம் கூறி வருகின்றது. ஆனால் இன்று இலங்கைதான் ஆசியாவில் மோசமான நாடாக காணப்படுகின்றது. அரசியல்வாதிகளின் குற்றச்செயல்களே இன்று நாட்டில் அதிகரித்துள்ளன. அரசாங்கத்தின் குற்றங்களை மறைப்பதற்கு அவர்களே புதிதாக பிரச்சினைகளை உருவாக்குகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.**

அரசாங்கத்திற்கு உள்ளேயே இன்று கொள்ளையர்களும் அடாவடிக்காரர்களும் உள்ளனர். இவர்களினாலேயே அப்பாவி மக்களின் சொத்துக்களும் பணமும் சூறையாடப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

இராஜகிரியவில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபேதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் இன்று ஆசிரியர்கள் தண்டிக்கப்படுகின்றனர். சிறுவர்கள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். அரச சேவையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இவற்றுக்கு இன்று வரையில் அரசாங்கத்தினால் எதுவித மாற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இன்று அரச வைத்தியசாலைகளை நம்பி மக்கள் சிகிச்சை பெறுவதில்லை. மருந்துகள் தரம் குறைந்தவையாக காணப்படுவதுடன் சேலைன மருந்துகளில் கலப்படம் செய்யப்படுகின்றது. இவை அப்பாவி மக்களையே பாதிக்கின்றன. நோயாளர்களின் உயிர்களோடு அரசாங்கம் விளையாடி வருகிறது.

அரசியல்வாதிகள் குற்றம் புரிவதற்கான வாய்ப்புக்கள் அரசாங்கத்தில் அதிகமாகவே காணப்படுகின்றது. அரசாங்கத்தில் இருப்பவர் தவறு செய்தாலும் பொருட்படுத்தாது விட்டுவிடுகின்றனர். ஆனால் அப்பாவி மக்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுகின்றனர.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இவற்றுக்கு பொறுப்புக் கூற முடியாத ஓர் அரசாங்கமாகவே காணப்படுகின்றது. அரசாங்கத்தின் முன் பொறுப்பின்மை மற்றும் அலட்சியத் தன்மை காரணமாக நாட்டில் அப்பாவி மக்கள் பலியாகிய நிலைமைகளையும் கடந்த காலங்களில் நாம் அவதானிக்க முடிந்தது.

காலநிலை அவதான மத்திய நிலையம் மற்றும் மீன்பிடி அமைச்சின் அசண்டைப் போக்கினால் 53 மீனவர்கள் வரையில் இறக்க நேர்ந்தது. பலர் காணாமற் போனார்கள். பல மீன்பிடி படகுகளும் சேதமடைந்தன. இவ் விடயம் தொடர்பில் இதுவரையிலும் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

ஒருவரை ஒருவர் குற்றம் கூறி தப்பித்துக் கொள்கின்றனர். இறுதியில் மீனவர்கள் கடலுக்குப் போனதுதான் தப்பு என்றாகி விட்டது.

பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களின் நிலைமை தொடர்பில் அரசாங்கம் இது வரை கவனம் செலுத்தவில்லை. இறந்த மீனவர்களின் உயிருக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று அரசாங்கம் பேரம் பேசியும் அந்தத் தொகையைக் கூட இன்னும் சரியாகக் கொடுக்கவில்லை.

13ஆவது திருத்தச் சட்டத்தை திருத்துவோம் என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்த அரசாங்கம் இன்று வாயடைத்துப் போயுள்ளது. இந்தியாவின் கோரிக்கைக்கு இணங்க தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

தற்போது தேர்தல் எனும் பெயரால் மக்களின் நிதியை நாசம் செய்து கொண்டு அரசியல்வாதிகள் ஆடம்பரமாக செயற்படுகின்றனர் என்றார். (அ-2)

# இலங்கைக்கு எதிரான பயண எச்சரிக்கைகள் தேவையில்லை

## விளக்கமளிக்க அரசு முடிபு

இலங்கைக்கு எதிராக எந்த நாடுகளும் தமது பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கையை விடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற முக்கிய நாடுகளுக்கு அந்த நாட்டிலுள்ள இலங்கையின் உயர்ஸ்தானிகரகத்தின் ஊடாக விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக பிரித்தானியா, அவுஸ்திரேலியா என்பன அந்நாட்டு பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்திருந்தமையைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த நாடுகளின் பயண எச்சரிக்கையில் இலங்கையில் யுத்த சூழ்நிலை குறித்த எச்சரிப்புக்கள் எவையும் விடுக்கப்படவில்லை.

மாறாக திட்டமிடப்படாத ஆர்ப்பாட்டங்கள், மத மற்றும் இன ரீதியான வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் போன்றவை தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறே வலியுறுத்தியிருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# இலங்கையின் வளங்களை இந்தியா கொள்ளையிடுகிறது

## சாடுகிறது ஜே.வி.பி

இந்தியா, இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்து அச்சுறுத்தி வருகிறது. கச்சதீவை திரும்பப் பெறுவோம் என்று கழுத்தை இறுக்கிப் பிடிக்கிறது என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.


ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சகல வகையிலும் இலங்கையைப் பணிய வைத்து புகையிரதப் பாதைகளை அமைக்கவும் சம்பூர் அனல் மின் நிலையத்தை அமைக்கவும் மருந்துகளை விற்பனை செய்யும் சந்தையாகவும் இலங்கையை இந்தியா மாற்றிக் கொண்டுள்ளது.


இந்தியா இலங்கையின் பொருளாதார வளங்களைக் கொள்ளையிட்டு வருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் நடந்தது போன்று தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியிலும் இவை நடந்து வருகின்றன.

நாட்டின் இறையாண்மை, சுதந்திரம் பற்றி அரசாங்கம் பேசினாலும் அவற்றை அரசாங்கம் இந்தியாவிடம் காட்டிக்கொடுத்துள்ளது. இதனால் இந்தியா இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்துவருகிறது.

இந்தியா பலவந்தமாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்திற்குள் திணித்தது. அதன்மூலம் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகள், நாட்டின் தேசிய பிரச்சினைக்கு தீர்வாக அமையவில்லை. ஜே.வி.பி அன்றுமுதல் கொண்டுள்ள இந்த நிலைப்பாடு தற்போது உறுதியாகியுள்ளது.

இதனால் மாகாண சபை முறைமையை ஒழிக்கவேண்டும். அதேவேளை தமிழ்மக்கள் முகம்கொடுக்கும் நியாயமான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கவேண்டும். இந்த நிலைப்பாட்டில் ஜே.வி.பி அன்று முதல் இன்று வரையும் இருந்து வருகிறது என்றார். (செ-11)





பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்துள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவியொருவர் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் தேசிய சேமிப்பு வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் வி. அருளானந்தம், இறைவரித் திணைக்கள யாழ்.மாவட்ட பிரதி ஆணையாளர் ப.சிவாஜி, வடமாகாண வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன் ஆகியோர் நிற்பதையும் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தும்பளைச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதிகை மலை



ஆன்மீகம் 63

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

திணை விதைத்தவன் திணையறுப்பான், வினைவிதைத்தவன் வினை அறுப்பான், பாவம் செய்தவனை அந்த பாவத்தின் கரங்கள் அடுத்த ஜென்மத்திலும் பற்றும் என்றும் பெரியோர்கள் கூறிச்சென்றார்கள்! மனிதன் பாவத்திற்கு ஆசைகளே. காரணம்! அதனால் ஆசைகளை அழித்துவிட்டால் அதிலிருந்துதப்பலாம் - என்று பகவான் புத்தர் உலகுக்கு போதித்தார்! முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், கெடுவான் கேடு நினைப்பான்! தன் வினை தன்னைச் சுடும், கத்தி எடுத்தவன் கத்தியாலே மரணமடைவான், எளியோரை வலியோர் வாட்டின் அவ்வலியோரை தெய்வம் நின்று கொல்லும்

என்றெல்லாம் எச்சரிக்கைகளை, மனித குலத்துக்கு சாத்திரங்களும் பெரியோரும் சொல்லியும் கேளாத செவியோர் மனம் போன போக்கில் சுயநலத்தோடு- பிறர் துன்பங்களுக்குக் காரணமாகிறார்கள்! மற்றவரை அழித்து செழித்து வாழ நினைப்பவர்களுக்கு ஆண்டவன் தரும் தண்டனை தான் தீராத கொடிய நோய்களாகும்.

மனித குல மாண்புக்கு பெரியோர் காட்டிய நல்வழிகளை காலங்காலமாக ஆட்சி செய்துஅலங்கோல வாழ்வு வாழ்ந்து- அடுத்த பிறவி எடுத்து- பாவச் சுமைகளை நோய்களாக சுமக்கும் போது ஐயோ கடவுளே! நான் பிறந்ததிலிருந்து யாருக்கும், எந்தக் கெடுதலையும் நினைக்கக் கூட இல்லையே நன்மைகள் தானே நினைக்கிறேன், செய்கிறேன்! இருந்தும் இந்த கொடுமையான நோய் எனக்கேன் வந்தது. இக்கொடுமையான வாழ்வு எனக்கு வரலாமா? என்றெல்லாம் மனிதன் கலங்கும் போது அவனுக்கு விடை கிடைப்பதில்லை- ஆண்டவனைத்தான் அவன் நொந்து கொள்ள முடியும்! அவன் நல்லவன் பரோபகாரி, யோக்கியன் அவனுக்கு இப்படி ஒரு நோய்! போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தானோ இப்போ படுறான் என்று ஊரில், அம்மனிதன் மேல் ஆதங்கம் உள்ளவர்கள் பேசிக் கொள்வார்கள்! இப்படிப் பேசுகிறவர் கூட தமக்கு என்று வரும்போது அடுத்த ஜென்மம், பாவம், வினை எல்லாம் மறந்துவிட்டு விதிவழி செல்லுவர்! இதைத் தான் ஆயிரம் நூல்வகை கற்றுத்தேறினும் இறுதியில்



சுய அறிவே மிகவும் இயலும் என்றும் வள்ளலார் கூறியிருக்கின்றார்! அழியப் போகிறவனுக்கு ஆன்றோர் கூறும் நல்வழிகள் ஏற்காது, மரணமடையப் போகிறவனுக்கு மருந்தேற்காது, என்று மகாபாரதம் சொல்வதை போல அவன் போக்கினை மாற்றவே முடியாது! ஜோதிட சாத்திரத்தில் கூட பூர்வ புண்ணியஸ்தானம் என்று கூறப்படும் ஸதானம் வலுப்பெற்றால் தான் அந்த ஜாதகன் வாழ்வு வாழ்வாக இருக்கும், வாலிபம் என்பது கலைகின்ற வேடம்

அதில் வந்தது வரட்டும் என்பது. முழுமூடன் - என்று ஒரு சினிமா பாட்டில் கவிஞர் அழகாக எழுதியிருந்தார்! இந்த பாடலை ஒரு முறை உளூந்தூர் பேட்டையில் தேநீர் அருந்த நாம் வண்டியை நிறுத்தி இருந்த போது ஒலி பெருக்கியில் கேட்டதாக ஞாபகம்! அந்த வரிகள் எனக்கு மிகவும் பிடித்தவரிகள் - சினிமாவில் இதுபோல் இப்போதெல்லாம் பாட்டு வருவதில்லை! இனிமே வராது - ஏன்னா நாம் அழிவை நோக்கித்தானே போய்க்கொண்டிருக்கிறோம். 2010க்குப் பின் கடல்கோளால் பதினாறு வருடம் மின்சாரமின்மையால் - இந்த திரையுலகமே ஸ்தம்பிக்கப் போகுதே! என்று நிறுத்தினார்.

திடீர் என்று சாமி 2010க்கு சொல்வதை தடுக்கும் விதமாக ஐயா! என்னென்ன பாவங்களுக்கு-என்னென்ன வியாதிகள்வரும்-விளக்கமாய் சொல்லணும் என்று பணிவோடு வேண்டுகோள்விடுத்தேன்

அது கேட்டு சிரித்தவர் ராஜா மீனை பிடித்து விற்பவனை விட- அதை வாங்கித் தின்பவன் அதிகமான பாவத்தை செய்கிறான்! இவன் மீனாய் பிறந்து தானே ஆகவேண்டும்! புடலை -விதைத்தால் வேர்க்கடலையா காய்க்கும்? கோழி சாப்பிடுகிறவன் மீண்டும் கோழியாய் பிறப்பான். கோழிக்கு ஆயுள் ஏழு வருடம் இது ஆண்டவனின் படைப்பு விதி.

அதை பிடித்து அடித்து தின்பவர் - அந்தக் கோழி வாழ்ந்திருக்க வேண்டிய நாட்களை தன் சுயநலத்துக்காக குறைத்தானல்லவா-இதனால்- அவனால் தடுக்கப்பட்ட மிகுதிக் காலங்களை இவன் கோழியாகப் பிறந்து நிறைவு செய்தே ஆக வேண்டும்-குப்பை கிளறி கோழி போல் கூவித்தான் ஆகவேண்டும். ஆட்டை வெட்டித்தின்பவன் வீட்டில், வெட்டியவன் வீட்டில் பிறக்கும் பெண்குழந்தை திருமணகாலம் வரை அடங்காப்பிடாரியாக வீட்டை ஆட்டி வைப்பாள்! விஷம் வைத்து கொல்பவன் பாம்பாய் பிறப்பான்! நாட்டை சுரண்டியவன் நாய்ப் பிறவி எடுத்து அலைந்து திரிவான். அடுத்தவனை சுரண்டித் தின்பவன் பூனையாக பிறப்பான்! ஏமாற்றுக் காரன் பெருச்சாளியாக அவதரிப்பான்! அதனால் தான் பசுவதை பஞ்சமா பாதகங்களிலும் கொடியது! சாராயம் காய்ச்சி பிழைப்பவன் தண்ணிப்பாம்பாகப் பிறப்பான், அந்த சாரயத்தில் அழிந்த குடும்பங்களின் வேதனைகள் இவனை அடுத்த பிறவியில் வாதனை செய்யும், குஷ்டம்-புற்றுநோய் போன்றவை இப்படிப்பட்ட பாதகர்களைத்தான் வேகமாக வந்தடையும்.

கல்வியை வியாபாரமாக்கி பிழைப்பவர்கள் அன்னை சரஸ்வதி தேவிக்கே அவமானத்தை தந்தவர்கள் -எண்ணும்-எழுத்தும் கண்ணெனத்தகும்-என்று ஔவை சொன்னதை மறந்து சரஸ்வதி அருளிய மெய்ஞானத்தை போதிப்பது இறைவன் திருப்பணி என்று கருதாமல் காசுக்காக கல்லூரிகளையும், பாடசாலைகளையும் நடத்துபவர்கள் அடுத்த ஜென்மத்தில் குருடு - ஊமை- செவிடாகவும் - பிச்சைக்காரனாகவும், கல்வி கற்கமுடியாத பிறவிகளாகவும் பிறப்பார்கள்! குழந்தை பாக்கியமே இவர்களுக்கு இருக்காது. ஆனால் பணம் இருக்கும். கடைசியில் ஒன்றுமில்லாமல் போய் விடும்.

இதில் சாமியார் வேடத்தில் பல மடங்கள், ஆச்சிரமங்கள் பள்ளிக் கூடம், கல்லூரிகள்கட்டி வியாபாரம் செய்பவர்களுக்கு மிக அதிக அளவில் தண்டனை இறைவனால் வழங்கப்படும் என்பது உறுதி.

தொடரும்

# இராணுவத்தின் நில அபகரிப்பும், தமிழ் மக்களின் சொத்துரிமையும்

ஆனால், இலங்கையின் உள்நாட்டுப்போரில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வடக்கு வாழ் மக்கள் அரசாங்கத்தின் இவ்வாறான நிலச்சட்டத்தால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். இலங்கையில் முன்னர் ஒரு காலத்தில் கேந்திர முக்கியத்துவம் மிக்க மீன்பிடித்துறைமுகமாக விளங்கிய மயிலிட்டி துறைமுகமானது தற்போது உயர் பாதுகாப்ப வலயம் என்ற பெயரில் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் 15 சதவீத நிலப்பரப்பை உள்ளடக்கிய இந்தப் பகுதியில் 24 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தினரின் மிக முக்கிய இராணுவத்தளங்களும், தொழிற்சாலைகளும் அமைக்கப் பட்டன. இதனால் மயிலிட்டித் துறைமுகத்தில் மீன்பிடியில் ஈடுபட்ட தமிழ் மீனவர்கள் தற்போது பருத்தித்துறை மற்றும் வலிகாமம் கிழக்குப் பகுதிகளில் மீள்குடியேற்றுவதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

சிவப்பு வெங்காயம், மிளகாய், புகையிலை, வாழை மற்றும் தக்காளி போன்ற பயிர்ச்செய்கைகளை மேற்கொண்ட வலிகாமம் வடக்கு வாழ் விவசாயிகளின் நிலங்கள் உயர் பாதுகாப்புவலயம் என்ற பெயரில் கையகப்படுத்தப்பட்டதால் இவர்களின் வாழ்வாதாரம்மிகவும் பாதிக்கப் பட்டுள்ளது. தாம் போரின் பின்னர் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறலாம் என்ற நம்பிக்கையில் இந்த மக்கள் காத்திருந்த போதும், உயர் பாதுகாப்பு வலயம் இன்னமும் அகற்றப்படாது இராணுவமயமாக்கல் மேலும் அதிகரிப்பானது இந்த மக்களின்வாழ்வாதாரத்தை மேலும் பாதித்து வருகிறது.

தாம் தமது நிலங்களை விட்டு இடம்பெயர்ந்ததால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாக தெல்லிப் பளையைச் சேர்ந்த விவசாயிகள் கூறுகின்றனர். இவர்கள் தமது நெருங்கிய உறவினர்களின் மிகச் சிறிய தோட்ட நிலங்களில் பயிர்ச்செய்கை யில் ஈடுபடுகின்றனர். தாம் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற் றப்படாததால் தொடர்ந்து தமது நிலங்களையும் சொத்துக்களையும் இழக்கும் அபாயத்தில் உள்ளதாகவும் இந்த விவசாயிகள் கூறுகின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப் படாததாலும், அரசாங்கத்தால் நட்டஈடுகள் எதுவும் வழங்கப்படாததாலும் இவர்களது வாழ்வுமேலும் மோசமடைந்துள்ளது.

இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட



நிலங்களில் இலங்கை இராணு வத்தினருக்கும், இலங்கை கடற் படையினருக்கும் பொருளாதாரவலயம் ஒன்றை உருவாக்கி அதில் நிலக்கரி மின் உற்பத்தி நிலையம், தொழிற்சாலைகள் மற்றும் விடுதிகள் போன்றவற்றை உருவாக்குவதற்கான திட்டத்தை அரசாங்கம் கொண்டுள்ளது. இதற்கப்பால், இங்கு உள்ளூர் தொழிலாளிகளைப் பயன் படுத்தி விவசாயம் மற்றும் மீன் பிடியை மேற்கொள்ளாது இதற்காக அரசாங்கப் பணியாளர்கள் பயன் படுத்தப்படுகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் இவ்வாறான நில அபகரிப்பு கொள்கையானது, சுற்றுலாத்துறை, முதலீடு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்காக என பெரிதாகப் பேசப்பட்டாலும் கூட, இதனால் போருக்குப் பின்னான மீள்கட்டுமானப் பணிகள் தாமதப்படுத்தப்படுவதுடன். மக்களின் வறுமை நிலையைக் குறைப்பதிலும் தாமதம் ஏற்படுகின்றது என்பதே உண்மையாகும்.

இலங்கை இராணுவமானது இந்த நிலங்களிலிருந்து உச்ச பயனைப் பெற்றுக் கொள்வதற்காக வளங்கள் மற்றும் தொழிநுட்பத்தைப் பயன் படுத்தினாலும்கூட, இவர்களின் இவ்வாறான செயல்களினால் போருக்கு பின்னான மக்களின் வாழ்வாதாரமானது ஏற்கனவே சீரழிந்துள்ள நிலையில், தனியாரின் காணிகளும் பொதுக்காணிகளும் கையகப்படுத்தப் படுவதானது மக்களை மேலும் மேலும் பாதிப்பிற்கு உள்ளாக்கியுள்ளது.

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் சமாதானம் என்பன நிலையாக கட்டியெழுப்புவதற்கு, இங்கு சொத்துரிமைகள் பாதிக்கப்படுவதுடன், இவ்வாறான நிலப்பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கும் நாட்டை முன்னேற்றுவதற்கும் உள்ளூர் மக்களுடன் கலந்தாலோசனைகள் நடாத்தப்படவேண்டும்.


இணையம்

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நன்றி கெட்ட மன்னன்



காசியை ஆண்ட பிரம்மதத்த னுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் சிறு வயதிலிருந்தே கொடூர குண முடையவன். எவரையும் எந்தக் காரணமும் இல்லாமல் தன் வீரர்க ளைக் கொண்டுபிடித்து வரச் சொல்லி அவர்களை துன்புறுத்தி மனம் மகிழ்வான். கிழவர்களையும் பண்டிதர்களையும் சற்றும் மதிக்காத தோடு அவர்களை அவமதித்தும் வந்தான். இதனால் அவனுக்கு இள வரசனுக்குரிய மரியாதைகளை யாரும் தந்ததே இல்லை. எல்லோ ரும் அவனை வெறுத்து வந்தார்கள்.

அவனுக்கு இருபது வயது ஆனபோது ஒருநாள் தன் நண்பர்களு டன் குளிக்க ஆற்றிற்குச் சென்றான் அவனுக்கு நீந்தத் தெரியாது. எனவே, நன்கு நீச்சல் தெரிந்த சில வேலையாட் களும் அவனுக்கு துணையாக சென்ற னர். இளவரசனும் அவனது நண்பர்க ளும் குளித்துக்கொண்டு இருக்கை

**அம்புலிமாமா கதைகள்**

யில் திடீரென ஆகாயத்தில் கரு மேகங்கள் சூழ்ந்து கொண்டன. இள வரசனும் அப்போது இந்த மாதிரி சம யங்களில் தான் நடு ஆற்றில் குளிக்க வேண்டும். என்னை நடு ஆற்றிற்கு கொண்டு செல்லுங்கள் என்று தன் வேலை ஆட்களிடம் கூறினான். அவர் களும் அவன் கூறியபடியே அவனை நடு ஆற்றிற்கு பிடித்து இழுத்துச் சென்றனர் அவனது நண்பர்களோ ஆழமில்லாத இடத்தில் இருந்து குளித்தனர்.

அப்போது அடைமழைபெய்தது. ஒரு அடிதூரத்தில் உள்ளது கூட கண் களுக்குத்தெரியாமல் ஒரே இருள் சூழ்ந்தது. அப்போது வேலை ஆட்கள் மகாதுஷ்டனான அந்த இளவரசனை ஒழிக்கத் தீர்மானித்து அவனை அங்கேயே விட்டுவிட்டு கரைக்குத் திரும்பி விட்டார்கள்.

கரையிலிருந்த இளவரசனின் நண்பர்கள் அவர்களிடம் இளவரசன் எங்கே என்று கேட்கவே அவர்களும் அவர் எங்கள் பிடியில் இருந்து நீந்திக் கொண்டே போய்விட்டார். இந்நேரம் கரையேறி அரண்மனையை அடைந்திருப்பார்கள் எனக் கூறினார்கள்.

அனைவரும் அரண்மனைக்குத் திரும்பினர். இளவரசனைக் காணாது மன்னன் அவனைப்பற்றிக் கேட்கவே வேலையாட்கள் முன்பு கூறியதையே மன்னனிடமும் கூறினார்கள். உடனே மன்னன் தன் ஆட்களை அனுப்பி ஆற்றில் நன்கு தேடும்படி கூறி னான். அவர்களும் தேடிப்பார்த்து விட்டு முடிவில் இளவரசன் அகப் படவில்லை என்று கூறினார்கள்.

ஆற்றில் விடப்பட்ட இளவரசனை வெள்ளம் அடித்துச் சென்றது. அதில் வந்த ஒரு மரக்கிளையைப் பிடித்து அதன் மீது ஏறி உட்கார்ந்து கொண்



டான். அந்தக் கிளை மீது பாம்பும் ஒரு எலியும் ஒரு கிளியும் இருந்தன.

மரக்கிளை மீது ஏறி உட்கார்ந்த இளவரசன் உரக்க "ஐயோ காப்பாற்றுங்கள்" எனப் பல முறை கூவினான். ஆனால், யாருமே அவனைப் பாராததால் அவன் மாலைப்பொழுதாகி இருட்டும் போது கூட அதே கிளை யின் மீது உட்கார்ந்தபடியே ஆற் றில் போய்க் கொண்டிருந்தான்.

ஒரு காட்டின் நடுவே அந்த ஆறு சென்ற போது இளவர சனின் கூக்குரல் கரையோரமாக ஆச்சிரமம் கட்டி வாழ்ந்து வந்த முனிவரான போதிசத் வரின் காதில் விழுந்தது. அவர் நல்ல கட்டுமஸ்தான உடல் கொண்டவர். தைரியசாலி. உடனே அவர் ஆற்றில் குதித்து நீந்தி இளவரசனும் மற்ற மூன்று பிராணிகளும் இருந்த மரக்கிளையை இழுத்துக்கொண்டு கரையில் கொண்டுபோய்ச்சேர்த்தார்.

அவர் முதலில் மூன்று பிராணிகளை யும் தம் ஆச்சிரமத்தில் கொண்டு போய்ச் சேர்த்து உணவு தயாரித்து அவற்றிற்குக் கொடுத்தார். பிறகே இளவரசனுக்கும் கொடுத்தார். அந்த மூன்று பிராணிகளும் இளவரசனும் இரண்டு நாட்கள் அந்த ஆச்சிரமத்தில் இருந்தனர். இதற்குள் புயல் காற்று ஓய்ந்தது. கிளி அங்கிருந்து செல்வதா கக் கூறி போதிசத்தவரிடம் "ஐயா! தாங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள். இந்தப் புயலில் என் வீடு நாசமடைந்து விட்டது. என்னால் [illegible] பறக்க முடியாது.

எனக்குப் பல நண்பர்கள் இமய மலைப் பகுதியில் இருக்கிறார்கள். என் உதவி எப்போதாவது உங்களுக்கு வேண்டு மென்றால் அதோ தெரியும் மலை அடி வாரத்தில் நின்று கூப்பிடுங்கள். என் நண்பர்கள் வாயிலாகப் பழங்களையும் தானியங்களையும் தங்களுக்குக் கிடைக்கச் செய்கிறேன் என்றது. போதி சத்வரும் "நீ கூறியதை நினைவில் வைத் துக் கொள்கிறேன்" என்று கூறியதும் கிளியும் விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து சென்றது.


அடுத்து பாம்பும் "நான் முற் பிறப்பில் ஒரு வியாபாரி. இந்த ஆற்றின் கரையில் ஓரிடத்தில் நிறையத் தங்க நாணயங்களைப் புதைத்து வைத்தி ருக்கிறேன். இந்தப் பிறப்பில் அத னைக் காத்து வருகிறேன். மக்களுக்கு உதவும் பணியில் இந்தத் தங்க நாணயங்களைத் தாங்கள் உபயோகிப் பதனால் அவற்றைத் தங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்று கூறி விடை பெற்றுச்சென்றது. இது போல எலியும் தன்னைப் பற்றிக் கூறி அவரிடம் விடைபெற்றது.

அப்போது இளவரசன் "நான் இந்நாட்டு இளவரசன். என் தந்தை இறந்த பின் இந்நாட்டின் மன்னனாகி விடுவேன். அப்போது நீங்கள் என் அரண்மனைக்கு வந் தால் தக்கபடி உபசரித்து கௌர விக்கிறேன்" என்று கூறிவிடை பெற்றுச்சென்றான்.

சில வருடங்கள் கழிந்தன. போதிசத்வர் காசி நகருக்குச் சென்றார். அப்போது பிரம்மதத் தன் இறந்துபோய் அவனது மக னான இளவரசன் அரசனாகி இருந்தான். போதிசத்வர் நகர வீதி வழியே சென்றுகொண்டு இருக்கையில் யானை மீது அமர்ந்து வந்த அந்தக்



கொடூர குண இளவரசன் தன் வீரர்களிடம் "அந்தப் பரதேசியைப்



பிடித்து ஒரு தூணில் கட்டி சவுக்கால் அடியுங்கள். பிறகு கொலைக்களத் திற்குக் கொண்டு போய் அவன் தலையை வெட்டி எறியுங்கள். நான் இளவரசனாக இருந்தபோது என்னோடு ஒரு எலி, ஒரு கிளி, ஒரு பாம்பு ஆகியவற்றைக் காப்பாற்றினான்.

ஆனால், முதலில் என்னைக் கவனிக்காமல் அந்த மூன்று பிராணிகளையும் கவனித்து உணவு அளித்து விட்ட பிறகுதான் எனக்கு உணவு கொடுத்தான். என்ன திமிர் இவனுக்கு" என்று கோபத்தோடு கூறினான். வீரர்களும் போதி சத்வரைப் பிடித்துச் சவுக்கால் அடித்தனர்.

அப்போது மக்கள் கூடி ஐயா! தாங்கள் என்றாவது இந்த மன்ன னுக்கு உபகாரம் ஏதாவது செய்து இருக் கிறீர்களா? என்று கேட்டார்கள். அவரும் ஆமாம். செய்திருக்கிறேன் எனக்கூறி காட்டில் இளவரசனையும் மூன்று பிராணிகளையும் காப்பாற்றித் தம் ஆசிர மத்தில் தங்க வைத்து இரண்டு நாட்க ளுக்குப் பின் அனுப்பியதை விவர மாகக் கூறினார்.

அதைக்கேட்ட மக்களுக்கு அந்த மன்னன் மீது கோபமும் வெறுப்பும் ஏற்பட்டது. ஏற்கனவே அவனது கொடும் செயல்களால் ஆத்திரம் கொண்ட அவர்கள் கொடுங்கோலனின் வீரர்கள் ஒரு சாதுவை துன்புறுத்துவது கண்டு ஆயுதங்களை எடுத்துக் கொண்டு அந்த வீரர்களைத்தாக்கி விரட்டினார்கள், போதிசத்வரை அவர்களிடமிருந்து விடுவித்தார்கள்.

தன் உயிருக்கே ஆபத்து வந்து விடுமோ என மன்னன் பயந்து அங்கி ருந்து ஓடி விட முயன்றான். ஆனால் மக்கள் அவனை யானை மீதிருந்து இழுத்துக் கீழே தள்ளி கொன்றுவிட் டார்கள். மக்கள் வேண்டிக்கொண்ட தன் பேரில் போதிசத்வர் காசி மன்ன ராகி ஆட்சி புரியலானார். அவர் பாம் பையும் கிளியையும் எலியையும் மறக்கவில்லை.


அவர் மலையடிவாரத் திற்குப் போய் பாம்பைச் சந்திக்க அது தான் காத்து வந்த தங்க நாணயங் களை அவரிடம் அளித்தது. அவரும் அதனை ஏற்று அப்பாம்பையும் தன்னோடு அழைத்து வந்தார். அவர் கிளியையும் எலியையும் கூட இவ்வாறே அழைத்து வந்தார்.

அவர் பாம்பு கொடுத்த பணத்தை மக்கள் நலனுக்காக செலவு செய்தார். பாம்பு வசிக்க அவர் தன் மாளிகை யிலே இருப்பிடம் அமைத்துக் கொடுத் தார். எலி வசிக்க நவரத்தினங்கள் பதித்த ஒரு வங்கு தயாரித்தார். கிளி இருக்க ஒரு தங்கக் கூண்டைச் செய்து கொடுத்தார். கொடுங்கோலனை இவ் வாறு அழித்ததால் காசி நாட்டு மக்கள் நல்ல வாழ்வைப் பெற்றார்கள். போதி சத்வரும் அவர்களுக்கு உபதேசம் செய்து நல்லாட்சி புரிந்து வந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

# 17.07.2013–16.08.2013



## சிம்மம்

மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்

**ஆழமாகச் சிந்தித்து அதிரடியாக முடிவெடுக்கும் சிம்ம இராசி நேயர்களே!**

**விரய ஸ்தானத்தில் சூரியன், விழிப்புடன் இருந்தால் ஆதாயம்!**

## விரய ஸ்தானத்தில் சூரியன், விழிப்புடனிருந்தால் ஆதாயம்!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத்தின் தொடக்கத்தில் சூரியன் சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்ரனுடன் இணைந்து விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் திடீர் மாற்றங்கள் பலவும் காண நேரிடும்.

குறிப்பாக தொழில்புரிவோருக்கு தொழில் மாற்றச் சிந்தனை உத்தியோகத்தில் இருப்போருக்கு உத்தியோக மாற்ற சிந்தனை, ஒரு சிலருக்கு வீடு மாற்றம், நாடு மாற்றம் போன்றவைகள் நிகழ வாய்ப்பு உண்டு. விரயங்கள் கூடும் இந்த நேரத்தில் விழிப்புணர்ச்சி கூடுதலாக இருந்தால்தான் அவற்றை கட்டுப்படுத்த இயலும்.

இருப்பினும் லாப ஸ்தானத்தில் லாபாதிபதி புதன் யோகம் தரும் செவ்வாயுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே, வரவும் வந்து கொண்டேயிருக்கும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப்பொருட்கள் வரை வாங்கி மகிழ்வீர்கள். சொத்துக்கள் வாங்க மேற்கொண்ட முயற்சியில் இருந்த தடை அகலும்.

வெற்றிகள் ஸ்தானத்தில் சனி உச்சம் பெற்றிருப்பதால் வழக்குகளில் வெற்றி கிட்டும். வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். கூட்டாளிகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். அரசியல் மற்றும் பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க பலன்கள் வந்து சேரும்.

புதிய பொறுப்புகளை ஏற்று புகழ் அடைவீர்கள். மதிப்பும் மரியாதையும் உயரும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். என்ன இருந்தாலும் ராகு, கேதுக்களுக்கு மத்தியில் அனைத்து கிரகங்களும் அடைபட்டு இருப்பதால் சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் சங்கடங்களையும் சந்திக்க நேரிடும். எனவே, அதற்கு பிராய்ச்சித்தமாக சர்ப்ப சாந்திகளை முறையாக செய்து கொள்வது நல்லது.

**சிம்ம சுக்ரனும் கன்னி சுக்ரனும்**

ஜூலை 18 ஆம் திகதி சிம்ம இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 3,10 க்கு அதிபதி இராசியில் சஞ்சரிக்கும் பொழுது முன்னேற்றப் பாதையின் முதற்படிக்குச் செல்வீர்கள். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். மண், பூமி சேர்க்கை அதிகரிக்கும். மகத்துவம் தரும் விதத்தில் புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. என்ன இருந்தாலும் தொழில் ஸ்தானாதிபதி நீச்சம் பெறும் நேரத்தில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு குறையலாம். கூடுதல் லாபம் கிடைக்கக் கூடிய விதத்தில் நடைபெறும் தொழிலில் விழிப்புணர்ச்சி அதிகம் தேவைப்படும்நேரமிது.

**கடக சுகரனும் சிம்ம புதனும்**

ஜூலை 30 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக மாமன், மைத்துனர் வழியில் விரயங்கள் ஏற்படலாம். பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீங்கள் செய்த உதவிக்கு நன்றி காட்டவில்லையே என கவலைப்படுவீர்கள்.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி சிம்மத்தில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இது ஒரு அற்புதமான காலமாகும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். பொன்னும் பொருளும் வாங்கக் கூடிய வாய்ப்புகள் உருவாகும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொகை வரவு அதிகரிக்கும். சேமிப்பும் உயரும்.

இம்மாதம் ராகு, கேது பரிகாரம் செய்வது நல்லது. வியாழன் தோறும் குரு வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ளும் மாதமாகும். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். இடமாற்றங்கள் இனிய மாற்றம் தரும். இல்லத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். உள்ளத்தில் மகிழ்ச்சி கூடும். இந்த மாதத்தில் கணவன், மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கனிவு கூடும். இல்லத்தில் சுபகாரியப்பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொன்னான வாய்ப்புகள் வந்து சேரும்.

சர்ப்ப சாந்தியைச் செய்வதோடு சகல பாக்கியமும் தரும் குருவையும் வழிபாடு செய்யுங்கள்.

## சிவல்புரி சிங்காரம்



## கன்னி

உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

**அனுபவங்களை அனைவருக்கும் எடுத்துச் சொல்லும் கன்னி இராசிநேயர்களே!**

**தொழில் மாற்றம் உருவாகும், தொகை வரவு திருப்தி தரும்!**

## தொழில் மாற்றம் உருவாகும்! தொகை வரவு திருப்தி தரும்!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் புதன் வலிமை அடைந்திருப்பதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். பொன்னான எதிர்காலம் அமைய வழிவகை செய்துகொள்வீர்கள்.

வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடும் விதத்தில் சனியின் ஆதிக்கம் அமைந்திருக்கிறது. சனி, பாத சனியாக சஞ்சரிப்பதால் இனி உங்களுக்கு யோகம்தான். வக்ர நிவர்த்தியான சனியை குரு பார்க்கிறார். எனவே, கூடுதல் லாபம் கிடைக்கும். மாதத் தொடக்கத்தில் விரயாதிபதி லாப ஸ்தானத்தில் இருப்பதால் விரயத்திற்கேற்ற லாபம் வந்து கொண்டே இருக்கும்.

எதை வாங்க வேண்டுமென்று நினைத்தீர்களோ அதை வாங்கி மகிழும் விதத்தில் வாய்ப்புகள் கைகூடி வரும். காசு, பணம் தானே வரும் விதத்தில் கிரக நிலைகளின் சஞ்சாரம் இருக்கிறது. சுய ஜாதக அடிப்படையிலும் திசாபுத்தி பலமாக இருந்தாலும் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும்.

குழந்தைகளின் கல்யாண கனவுகளை நிறைவேற்ற முடியவில்லையே? குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்க நினைத்தும் அது நடக்கவில்லையே? என்றெல்லாம் மனக் குழப்பத்தில் இருந்த உங்களுக்கு இப்பொழுது வீடு வாங்கும் காலம் பிறக்கப்போகிறது. நம்பிக்கைக்குரியவர்கள் உங்கள் நல்ல குணமறிந்து உதவி செய்வார்கள்.

என்ன இருந்தாலும் எட்டில் கேது இருப்பதால் ஆரோக்கிய பாதிப்புகள் வரத்தான் செய்யும். அதை நிவர்த்தி செய்ய கேது பரிகாரம் செய்வது நல்லது. கொள் தானம் செய்வது, கொள் தீபம் ஏற்றுவது, கேது சன்னிதியில் சிறப்பு வழிபாடுகள் செய்வது உகந்தது.

**சிம்ம சுக்ரனும் கன்னி சுக்ரனும்**

ஜூலை 18 ஆம் திகதி சிம்ம இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். தனாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் எதிர்பாராத விரயங்கள் ஏற்படலாம். குடும்ப சுமைகூடும். கொடுக்கல்– வாங்கல்களில் திருப்தி ஏற்படாது. அரசியலில் இருப்பவர்களுக்கு அதிரடி மாற்றங்கள் ஏற்படலாம்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். இது மேலும் கவனமுடன் செயற்பட வேண்டிய நேரமாகும். தனாதிபதி நீச்சம் பெறும் இந்த நேரத்தில் நம்பிச் செய்த காரியங்களில் எல்லாம் விரயங்களே மேலோங்கும். தும்பிக்கையான் துணையும் தொல்லைகளை எல்லையை விட்டே அகலச் செய்யும். விஷ்ணுவின் அருளும் உங்களுக்கு இருந்தால் பாதிப்புகள் ஏற்படாது. எனவே, அவற்றை முறையாக வழிபடுவது நல்லது.

**கடக புதனும் சிம்ம புதனும்**

ஜூலை 30 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன்மூலம் பயணங்களால் பலன் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளுக்கு கொடுத்து உதவி செய்வீர்கள். சேமிப்புகள் அதிகரிக்கும். சிறப்பான இந்த நேரத்தில் புதிய ஒப்பந்தங்களும் வந்து கொண்டே இருக்கும்.

ஆகஸ்ட் 16 ஆம் திகதி சிம்ம இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக ஊர் மாற்றம், இடமாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். உத்தியோகத்திலும் மாற்றங்கள் வருவதை தவிர்க்க முடியாததாக அமையும்.

இராசிநாதன் பன்னிரெண்டில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் உறவினர் வழியிலும் செலவிட நேரிடும். உடல் நலம் கருதியும் செலவிட நேரிடும். இம்மாதம் அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் இனிய மாதமாகவே உங்களுக்கு அமைகிறது. மாதத் தொடக்கத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். தங்கம், வெள்ளி போன்றவைகள் வாங்கும் எண்ணம் கைகூடும். கணவன் – மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்துசேரும். மாதக் கடைசியில் மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம். பெருமாள் வழிபாடு பெருமை சேர்க்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு உள்ள அடுத்த தெரிவு என்ன?



இந்தியாவின் பிராந்திய அரசியல் இராஜதந்திரத்துக்கு இப்போது மிகப்பெரிய சோதனை ஏற்பட்டுள்ளது. இலங்கை விவகாரத்தில் இந்தியாவுக்கு உள்ள செல்வாக்கு எத்தகையது என்ற கேள்வி எழுப்பப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. அதற்கான காரணம், தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா கொண்டிருந்த செல்வாக்கும் ஆதிபத்தியமும். 2009 மே 18 ஆம் திகதியுடன் கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டதாகும். இந்தியாவுடன் நேரடி நட்புக் கொண்டதாக விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லாவிட்டாலும், தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவினது அதிகார சமநிலையைப் பேணுவதற்கு மறைமுக காரணியாக அந்த இயக்கம் இருந்து வந்தது என்பது ஆச்சரியமான உண்மை.

விடுதலைப்புலிகள் இயக்கம் இருந்தவரையில் இந்தியாவினால் இந்த உண்மை உணரப்படவில்லை. விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் ஏற்படக்கூடிய தீமைகளை மட்டுமே இந்தியா கணக்குப் பார்த்தது. அதற்கு அப்பால் இந்தியாவின் பாதுகாப்பில் செல்வாக்குச் செலுத்தத்தக்க காரணியாக இது இருந்துள்ளது என்பது விடுதலைப் புலிகளால் ஏற்பட்ட வெற்றிடத்துக்குப் பின்னரே இந்தியாவினால் உணரப்படுகிறது.

விடுதலைப்புலிகள் வீழ்ச்சிக்குப் பின்னர் தெற்காசியாவில் ஏற்பட்டுள்ள பிராந்திய, அரசியல், இராஜதந்திர, பொருளாதார மாற்றங்கள், இந்தியாவுக்கு சாதகமான அம்சங்களைக் கொண்டிருக்கவில்லை. இலங்கையின் மீது கொண்டிருந்த செல்வாக்கு உடைந்து போனமை அதற்கான மிகப்பெரிய காரணம். இந்தியப் பெருங்கடலின் சர்வதேச கடற்பாதைக்கு மிக நெருக்கமாக அமைந்துள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனா தன் கைக்குள்கொண்டு வரத் தொடங்கியதன் பின்னர், இலங்கையின் எத்தகைய நகர்வுகளையும் இந்தியா கைகட்டி நின்று வேடிக்கை பார்க்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது.

அவ்வப்போது இந்தியா தனக்குக் கிடைக்கக் கூடிய சின்னச்சின்ன துருப்புச்சீட்டுகளை வைத்துக்கொண்டே, இலங்கையுடனான நட்பைப் பேண வேண்டிய நிலையில் உள்ளது. இப்போது 13ஆவது திருத்தச் சட்ட விவகாரத்தில் ஏற்பட்டுள்ள இழுபறியில், இந்தியா முன்னகர்த்த முடியாத ஒரு இராஜதந்திரச் சிக்கலை எதிர்கொண்டுள்ளது. தனது சொந்தக் குழந்தையான 13 ஆவது திருத்தச்சட்டத்தை இலங்கை அரசாங்கம் பலிகொடுக்கப் போவதை இந்தியாவினால் பார்த்துக் கொண்டிருக்கவும் முடியவில்லை. அதேவேளை அதைத் தடுப்பதற்கு எதையும் செய்யவும் முடியாத இக்கட்டான நிலைக்குள்ளும் இந்தியா சிக்கிப் போயுள்ளது.

இந்தியா தனது இராஜதந்திரிகள் மூலம், வெளிவிவகார அமைச்சர் மூலம், பிரதமர் மூலம், எல்லாம் 13 ஆவது திருத்தச்சட்டம் பலவீனப்படுத்தப்படுவதை விரும்பவில்லை என்று தெளிவாக எடுத்துக் கூறியும், இலங்கை அரசாங்கத்தின் முடிவையோ, போக்கையோ மாற்ற முடியவில்லை. கடைசியாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்தபோதுகூட, இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு முரணானது என்று தெரிந்திருந்தும்கூட தனது முடிவில் இருந்து இலங்கை பின்வாங்கவில்லை.

இந்தியாவின் முகத்துக்கு நேரே அடித்துக்கூறும் இந்தத் தற்துணிவு இதற்கு முன்னர் பிறேமதாச தவிர்ந்த வேறெந்த ஜனாதிபதிகளுக்கும் இருந்திருக்கவில்லை. அப்போது புலிகளுடன் இணைந்து கொண்டு அவர், இந்தியப் படைகளை வெளியேறுவதற்குக் காலக்கெடு விதித்தார். போர்ப் பிரகடனம் செய்யப் போவதாக அச்சுறுத்தினார். எனினும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை கடுமையாக எதிர்த்த பிறேமதாசகூட அதனை ஒழிப்பதற்கோ, அதன் மடியில் கைவைப்பதற்கோ துணியவில்லை. ஆனால், இப்போதைய அரசாங்கம் இந்தியாவுடன் போர்ப் பிரகடனம் செய்யவில்லையாயினும் இந்தியாவின் குழந்தையான 13 ஆவது திருத்தச் சட்டத்தையே பலிகொடுக்கத் துணிந்துவிட்டது.

13 ஆவது திருத்தச்சட்டத்தைப் பலவீனப்படுத்துவதற்கான தெரிவுக்குழுவின் பணிகள் ஆரம்பமாகிவிட்டன.

தமது முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவே உறுதியாகக் கூறிவிட்டார்.

காக்கவோ, முழுமையாக நடைமுறைப்படுத்தவோ, இலங்கை அரசாங்கம் முன்வரப் போவதில்லை என்பது இந்தியாவுக்கு நன்றாகவே புரிந்திருக்கும். ஆனாலும் இந்தியத் தரப்பு இன்னமும் இலங்கை அதைச் செய்யும் என்று நம்புவதாக அறிக்கைகளையே வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை தற்போதைய நிலையில் விட்டுவைக்க இலங்கை அரசாங்கம் தயாராக இல்லாத நிலையில் இந்தியாவுக்கு மாற்றுத் தெரிவு என்று எதுவுமே இல்லாத வெறுமை நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்த வெளிதான் இலங்கைக்குச் சாதகமானது. இப்போது இலங்கைக்கு வாய்த்த மிகப் பெரிய வரப்பிரசாதம்.

இந்தியா தனது வாயாலேயே தனது பலவீனத்தை வெளிப்படுத்திவிட்ட நிலையில் உள்நாட்டு விவகாரம் என்ற தளத்தை வைத்துக் கொண்டு இலங்கை அரசாங்கம் சுலபமாக காய்களை நகர்த்தி வருகிறது. இதனால் தமிழர்களின் நலன்களும் உரிமைகளும் கேள்விக்குள்ளாக்கப்படுவதுடன் நின்றுவிடப்போவதில்லை. இலங்கையில் உள்ள தமிழர்களை நாம் ஒருபோதும் கைவிட்டு விடப் போவதில்லை என்று இந்தியா அடிக்கடி கூறும் வாக்குறுதியும் கூட கேள்விக்குள்ளாகி விடும். இப்போதைய நிலையில் இலங்கை

## பிராந்திய அரசியல் இராஜதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய சோதனை.....

எந்த மாற்றத்தையும் இந்தியாவினால் செய்ய முடியவில்லை. தெரிவுக்குழுவே 13 ஆவது திருத்தச்சட்டத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் என்று மட்டுமின்றி மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது. அது நடக்காது என்றும் சிவ்சங்கர் மேனனிடம் வெளிப்படையாகவே கூறியிருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. இது 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற, அதில் கைவைக்கவே கூடாது என்ற இந்தியாவின் குழந்தையான 13 ஆவது திருத்தச்சட்டத்தை அழிப்பதற்கு இந்தியாவின் உதவியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாடியதுதான், மிகப் பெரிய நகைச்சுவை.

அதாவது, தெரிவுக்குழுவுக்குள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வரவழைக்க இந்தியா உதவ வேண்டும் என்று சிவ்சங்கர் மேனனிடம் மஹிந்த ராஜபக்சவும் சல்மான் குர்ஷித்திடம் பசில் ராஜபக்சவும் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இவையெல்லாவற்றுக்கும் பின்னரும் 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தற்போதுள்ளதுபோல பாதுகாக்க... போது இந்தியாவுக்கு இலங்கை மீது உள்ள ஒரே பிடி அல்லது துருப்புச் சீட்டு என்றால் அது கொமன்வெல்த் உச்சிமாநாடுதான்.

இந்தியாவினது எந்தக் கருத்தும் கொமன்வெல்த் மாநாடு நடைபெறும் வரையில்தான் இலங்கையால் செவிமடுக்கப்படும். அதற்குப் பின்னர் இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் நிலை கேள்விக்குள்ளாக்கப்படும்.

இலங்கை உள்ளிட்ட எந்தவொரு நாட்டினதும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடப் போவதில்லை என்ற இந்தியாவின் அணுகுமுறை விவகாரத்தில் எதையும் செய்யவும் முடியாத- அதேவேளை எதையும் செய்யாமல் இருக்கவும் முடியாத திரிசங்கு நிலையில் இந்தியா சிக்கிப் போயுள்ளது. இந்த இராஜதந்திர நெருக்கடி- இடைவெளி இந்தியாவுக்கு எதுவரை நீளப் போகிறது என்பதை புதுடெல்லியின் அதிகாரபீடம் தான் முடிவு செய்ய வேண்டும். இந்த முடிவை இந்தியா எந்தளவுக்குத் தாமதிக்கிறதோ, அந்தளவுக்கு பிராந்திய ரீதியில் இந்தியாவின் செல்வாக்கும் கேள்விக்குள்ளாக்கப்படவே வாய்ப்புகள் உள்ளன.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு.பாடசாலைகள் சகல வசதிகளுடனும் இயங்க நடவடிக்கை எடுப்பேன்-பந்துல

(குருமன்காடு)

தமிழ் மக்களுக்கு இருந்த ஒரே வளம் கல்வியாகும். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் உயர் பதவியில் இருந்த வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், கல்வித்துறை உயர் உத்தியோகத்தர்கள் மற்றும் உயர்ந்த பதவியிலிருந்தவர்கள் பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களே! எனினும் கடந்த 30 வருடங்களாகத் தமிழ் பேசும் மக்களுக்கும் மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் போரினால் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

இதனால் இக்காலத்தில் தமிழ் மக்களுக்கு அதிர்ஷ்டம் இல்லாதநிலை ஏற்பட்டு கைகளில் பேனாவும் பென்சிலும் ஏந்த வேண்டிய சந்தர்ப்பத்தில் பிரபாகரனால் துப்பாக்கியை ஏந்த வேண்டி ஏற்பட்டது. இதனால் அந்த மாணவர்களுக்கு கிடைக்கக் கூடிய உயர்ந்த சந்தர்ப்பங்கள் எவையும் கிடைக்காமல் செய்யப்பட்டன.

அதன் விளைவாகவே தற்போது தமிழ் மொழிமூல பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்கள், டிப்ளோமா ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இவ்வாறான நிலையே நாம் முகம் கொடுக்கும் முக்கிய பிரச்சினையாக உள்ளது என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

30 வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள், கட்டடங்கள் பலவாக உள்ளன. ஆனால், அவ்வாறான பாடசாலைகளைப் பார்வையிட கல்வி அமைச்சர் வருகை தர முடியாத சூழ்நிலை அப்போது இருந்தது. ஆனால், பல வருடங்களுக்குப் பின்னர் ஓர் கல்வி அமைச்சர் பாடசாலைக்கு சமுகம் கொடுக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

அதற்கு இன்றுள்ள சமாதான சூழ்நிலையே காரணமாகும். ஆகையால் இப்பிரதேசத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் இளைஞர், யுவதிகளுக்குக் கண்டி, காலி, கொழும்பு போன்ற மாவட்டங்கள் போல் அனைத்து வசதிகளுடனான கல்விச் சூழலை ஏற்படுத்துவதே மஹிந்த சிந்தனையின் நோக்கமாகும். கண்டி, கொழும்பு பாடசாலைகள் போல் 2016 ஆம் ஆண்டு சகல வசதிகளுமுடைய பாடசாலையாக இப் பாடசாலையையும் மாற்றி வைப்பேன் என உறுதியளிக்கின்றேன் என மேலும் தெரிவித்தார். (அ-250)

# வடக்கு மாகாணசபை தேர்தலில் கூட்டமைப்பை ஆதரியுங்கள்

## த.தே.ம.முன்னணியிடம் குமரகுருபரன் கோரிக்கை

(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு வழங்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான ந.குமரகுருபரன் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் வடக்கு மாகாணசபைத் தேர்தல் தமிழர்களுக்கு பலம் சேர்ப்பதாக இருக்க வேண்டுமே தவிர தமிழர்களின் பலத்தை இழக்கச் செய்வதாக அமைந்துவிடக் கூடாது.13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது ஒழித்து மாகாண சபை முறையினை அடியோடு அழிக்க அரசாங்கம் முயன்று வருகின்றது. இந்த யதார்த்த அரசியலைப் புரிந்து கொண்டு வட மாகாணசபை தேர்தலில் கூட்டமைப்பை ஆதரிக்க கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வரவேண்டும்.

மாகாணசபை முறைமையை ஒழிக்க முயலும் அரசாங்கத்தின் கைக்கூலிகள். இந்தத் தேர்தலில் வெற்றிபெறுவதைத் தடுக்க வேண்டும். இதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூட்டமைப்பை ஆதரிப்பதே ஒரே வழியாகும்.

மாகாணசபைகள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக அமையாவிட்டாலும் இந்த இடைவெளியை அரசுக்கு ஆதரவாக மாற்றாது தமிழர் தலைமைக்கு வலுச் சேர்க்க வேண்டும். கூட்டமைப்பிற்கு ஆதரவு வழங்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரிடம் நான் கோரியுள்ளேன். தற்போதைய நிலையில் அதுவே அவசியமானதாகும். (அ-2)

# புறோட் லண்ட் நீர்மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படும்

எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மின்சாரத்தை விநியோகிக்கும் நோக்கில் புறோட் லண்ட் நீர்மின் உற்பத்தி நிலையத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய புறோட் லண்ட் நீர்மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான பணிகளை ஆரம்பித்து வைத்ததன் பின்னர் அவர் இக் கருத்தை வெளியிட்டார். இன்று சர்வதேச நாடுகளிடம் இருந்து இலங்கைக்கு பாரிய அளவில் முதலீடுகள் கிடைப்பதாகவும் அதற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாடுகளுக்கு அமைய தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை மேற்கொள்ளவும் தற்போது நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

வெளிநாடு செல்லும் இலங்கையர்கள் சிலர் இங்கு மின்சார கட்டணங்கள் அதிக அளவில் அறவிடப்படுவதாக தெரிவித்து வருகின்றனர் என கூறிய அமைச்சர் இதுபோன்ற புதிய மின் உற்பத்தி திட்டங்களின் மூலம் கட்டணத்தை மட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார். (அ-2)




* 1203 - நான்காம் சிலுவைப் படைகள் கொன்ஸ்டண்டீனபோல் நகரைத் தாக்கிக் கைப்பற்றின. பைசண்டைன் பேரரசர் மூன்றாம் அலெக்சியஸ் ஆஞ்செலஸ் தலைநகரை விட்டுத் தப்பியோடினான்.
* 1755 - கிழக்கிந்தியக் கம்பனிக்குச் சொந்தமான டொடிங்டன் என்ற கப்பல் இங்குலாந்தில் இருந்து திரும்பும் வழியில் மூழ்கியதில் பல பெறுமதியான தங்க நாண யங்கள் கடலில் மூழ்கின.
* 1762 - ரஷ்யாவின் மூன்றாம் பீட்டர் கொல்லப்பட்டதை அடுத்து அவனது மனைவி இரண்டாம் கத்தரீன் அரசியானாள்.
* 1815 - பிரான்சில் நெப்போலியன் பொனபார்ட் பிரித்தானியர்களிடம் சரணடைந்தான்.
* 1841 -முதலாவது பஞ்ச் இதழ் லண்டனில் வெளியிடப்பட்டது.
* 1911 - யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டத்தின் திருமண விதிகளுக்கு மாற்றாக "யாழ்ப்பாண திருமண சிறப்புச் சட்டம்" கொண்டுவரப்பட்டது.
* 1918 - போல்ஷெவிக் கட்சியின் உத்தரவின் பேரில் ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாசும் அவனது குடும்பத்தினரும் கொல்லப்பட்டனர்.
* 1918 - டைட்டானிக் கப்பலில் இருந்து 705 பேரைக் காப்பாற்றிய "கர்பாத்தியா" என்ற கப்பல் அயர்லாந்துக்கருகில் மூழ்கியதில் 5 பேர் உயிரிழந்தனர்.
* 1944-இரண்டாம் உலகப் போர்: முதற் தடவையாக நேப்பாம் குண்டுகள் அமெரிக்காவினால் பிரான்ஸ் மீது வீசப்பட்டன.
* 1945 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்காவின் ஹாரி எஸ். ட்ரூமன், பிரித்தானியாவின் வின்ஸ்டன் சேர்ச்சில், சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உலகப்போர் தொடர்பான தமது கடைசி உச்சி மாநாட்டை ஜேர்மனியின் பொட்ஸ்டாம் நகரில் ஆரம்பித்தனர்.
* 1955 - கலிபோர்னியாவில் டிஸ்னிலாண்ட்டின் ஆரம்ப நிகழ்வுகள் தொலைக்காட்சி மூலம் காண்பிக்கப்பட்டன.
* 1967 -நாசாவின் சேர்வயர் 4 ஆளில்லா விண்கலம் சந்திரனில் "சைனஸ் மெடை" என்ற இடத்தில் மோதியது.
* 1968 - ஈராக்கில் இடம்பெற்ற புரட்சியில் ஜனாதிபதி அப்துல் ரகுமான் ஆரிஃப் பதவியில் இருந்து அகற்றப்பட்டு அகமது ஹசன் அல்-பாக்கர் ஜனாதிபதியானார்.
* 1973 - ஆப்கானிஸ்தான் அரசர் முகமது சாகிர் ஷா கண் சிகிச்சைக்காக இத்தாலி சென்றிருந்த போது பதவியில் இருந்து அகற்றப்பட்டு அவரது உறவினர் முகமது தாவுத் கான் மன்னரானார்.
* 1975 - அமெரிக்காவின் அப்பல்லோ விண்கலமும் சோவியத்தின் சோயுஸ் விண்கலமும் விண்வெளியில் ஒன்றாக இணைந்தன. இரண்டு நாடுகளின் விண்கலங்கள் ஒன்றாக இணைந்தது இதுவே முதற் தடவையாகும்.
* 1976 - கனடாவின் மொண்ட்ரியால் நகரில் கோடை கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆரம்பமாகின. நியூசிலாந்து அணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து 25 ஆபிரிக்க நாடுகள் இப்போட்டிகளைப் புறக்கணித்தன.
* 1976 - கிழக்குத் தீமோர் இந்தோனேசியாவுடன் இணைக்கப்பட்டது.
* 1979 - நிக்கராகுவா ஜனாதிபதி அனஸ்தாசியோ சமோசா டெபாயில் பதவியில் இருந்து விலகி மயாமிக்குத் தப்பி ஓடினார்.
* 1998 -பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை நிரந்தரமாக அமைப்பதற்கான உடன்பாடு உரோம் நகரில் எட்டப்பட்டது.


பிறப்புகள்

* **1941 -பாரதிராஜா, இந்தியத் திரைப்பட இயக்குனர்**
* 1971 - சௌந்தர்யா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 2004)
* 1977 - மாதங்கி அருள்பிரகாசம், ராப் இசைப் பாடகி

இறப்புகள்

* 1918 - ரஷ்யாவின் மன்னர் இரண்டாம் நிக்கலாஸ் (பி. 1868) குடும்பம்
* 1972-எமிலியானுஸ் பிள்ளை, யாழ்ப்பாணத்தின் முதலாவது தமிழ் ஆயர், (பி. 1901)

**பாரதிராஜா**



பாரதிராஜா 1941 ஆம் ஆண்டு 17 ஆம் திகதி தேனி அல்லிநகரத்தில் பிறந்தார். திரைப்பட இயக்குநராக திரையுலகிற்கு அறிமுகமான இவர் தயாரிப்பாளர், நடிகர் என பல திறமைகளைக் கொண்டவராகத் திகழ்ந்து வருகிறார்.

அரங்கத்துக்குள் எடுக்கப்பட்டு வந்த தமிழ்த் திரைப்படங்களை வெளிப்புற படப்பிடிப்புப் பகுதிகளுக்கு கொண்டு சென்ற பெருமை இவரையே சாரும்.

பெரும்பாலும் உணர்வு நிறைந்த நாட்டுப்புறக் கதைகளை படம் பிடிக்கும் பாரதிராஜா, இசையமைப்பாளர் இளையராஜாவுடன் இணைந்து மறக்க முடியாத இனிய பலபாடல்களை தத்துருபமாக எடுத்தியம்பியவர்.

திரைப்படத் துறையில் பல முன்னணி நாயகிகளை அறிமுகம் செய்தார். 2004 ஆம் ஆண்டு இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பாரதிராஜா 1977 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பல திரைப்படங்களை இயக்கி திரைப்படத்துறையில் முன்னணி இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டை சர்வதேசம் புறக்கணிக்க வேண்டும்

## பொது நலவாய சட்டத்தரணிகள் கோரிக்கை

(கொழும்பு)

**இம்முறை கொழும்பில் நடைபெற வுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை சர்வதேச நாடுகள் புறக் கணிக்க வேண்டும் என்று பொது நலவாய நாடுகள் அமைப்பின் சட் டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள் ளனர்.**

பொதுநலவாய நாடுகள் அமைப் பின் சட்டத்தரணிகள் ஒன்றியத்தின் பிரதி தலைவர் எலக்ஸ் வார்ட் த ரேடியோ நியூசிலாந்துக்கு வழங் கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரி வித் துள் ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இந்த கோரிக்கைக்கு, 50 பொது நலவாய நாடுகளைச் சேர்ந்த சட்டத் தரணிகளும் இணக்கம் தெரிவித் துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே பொதுநலவாய நாடு களின் சட்டத்தரணிகள் மற்றும் நீதி பதிகள் ஒன்றிணைந்து, இலங்கை யில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது என்ற தீர்மானத்தை நிறை வேற்றி இருந்தனர்.

எனினும் இந்த தீர்மானத்தை பொதுநலவாய நாடுகளின் அமை ப்பு ஏற்கனவே மறுத்திருந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டுள்ள சட்டத்தர ணிகள் ஒன்றியத்தின் பிரதித்தலை வர், குறித்த மாநாடு இலங்கையில் நடைபெறுவதால், இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச சட்ட மீறல்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் யுத்த குற்றங்கள் என்பவற்றை, சர்வதேச நாடுகள் அங்கீகரிப்பதாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் இலங்கையின் யுத்தக் குற்றங்களை ஏற்றுக் கொள் ளாத எந்த நாடும் இலங்கையில் நடைபெறும் மாநாட்டுக்கு செல்லக் கூடாது என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# வீட்டு உரிமையாளர்களுக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம்

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் உயிர் ஆபத்தை விளைவிக்கும் டெங்கு நோயை பரப்பும் வகையில் வீட்டுச் சூழலை வைத்திருந்த வீட்டு உரிமையாளர் 10 பேருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத் தித்துறை நீதிமன்றம் நேற்றுமுன் தினம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பொலிஸ் பிரிவில் சுகா தார பரிசோதகர்களும் பொலிஸாரும் இணைந்து வீடுவீடாக மேற்கொண்ட பரிசோதனையின் போது தமது வீடு களை அசுத்தமான முறையிலும் டெங்குநோய் பரவக் கூடிய வகையிலும் வைத்திருந்த வீட்டு உரிமையாளர்க ளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்த னர்.

இவ் வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் எடுத் துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் முன் குறித்த வீட்டு உரிமையாளர்கள் தாம் குற்றவாளி என தெரிவித்ததை அடுத்து, 10 பேருக்கும் தலா 4 ஆயி ரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (அ-ம-24)

# களனி அதிவேக பாதை செப்டெம்பரில் திறப்பு

செப்டெம்பர் மாதம் திறந்து வைக் கப்படவுள்ள கட்டுநாயக்க களனி அதவேகப் பாதையை பொருளா தார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக் கிழமை பார் வையிட்டார்.

இந்த அதிவேகப் பாதையின் இரு மருங்கிலும் நிழல் தரும் பாரிய மரங்களை நடுமாறு உரிய அதி காரிகளுக்கு அமைச்சர் இதன்போது பணிப்புரை விடுத்தார்.

கட்டுநாயக்க முதல் களனி வரை யிலான 26 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த அதிவேக பாதை அமைக்கும் பணியை துறைமுகம் கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் 2008 ஆம் ஆண்டு ஆரம்பித்தது.

இங்கு கருத்து தெரிவித்த அமைச் சர், வட பகுதிக்கான அதிவேகப் பாதை அமைக்கப்பட்டதன் பின்னரே இந்த தெற்கு மற்றும் கட்டுநாயக்க அதி வேகப் பாதையின் உண்மையான பயன்பாடு மக்களுக்குக் கிடைக்கும் என்று அவர் கூறினார். (அ-2)




வடமாகாணத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில்நுட்பத்துறை பிரிவின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் இணைந்து நாடாவெட்டி தொழில்நுட்பத் துறைப் பிரிவை திறந்து வைப்பதையும் மேற்படி துறையில் இணைந்து கொண்ட மாணவர்கள், பாடசாலை அதிபர் மற்றும் விருந்தினர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# 13 ஆவது திருத்த சட்ட அதிகாரம் கைவிட்டு போக அனுமதியோம்

## கிழக்கு மாகாண அமைச்சர் ஹபிஸ்

அரசாங்கத்துடன் இணைந்திருக் கின்றோம் என்பதற்காக 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் எவரும் கை வைக்க இடமளிக்கமாட்டோம். ஸ்ரீல ங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த விட யத்தில் மிகவும் தெளிவான நிலைப் பாட்டை கொண்டிருக்கின்றது என கிழக்கு மாகாண அமைச்சர் ஹபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் உள்ள கிராமமொன் றில் சமுர்த்திப் பயனாளிகளின் நூறு குடும்ப அங்கத்தவர்களுக்கு குடிநீர் இணைப்புக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கி வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

சிறுபான்மைச் சமூகங்களின் நலன் கருதி உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை இன்று நாட்டின் பெரும்பான்மைச் சமூகங் களும் பலன்களை அனுபவிக்கும் வண்ணம் இயங்கிக் கொண்டிருக் கின்றது.

மறைந்த தலைவர் மர்ஹூம் எம். எச்.எம். அஷ்ரப் முதலாவது மாகாண சபைத் தேர்தலில் தனக்கும் முஸ் லிம் சமூகத்துக்கும் மரண அச்சுறுத் தல் விடுக்கப்பட்ட போதிலும், சமூக நலனுக்காக உயிரைப் பணயம் வைத்து அந்த தேர்தலில் போட்டி யிட்டார்.

அப்போது எமது கட்சி வட,கிழக்கு மாகாணத்தில் 17 ஆசனங்களைப் பெற்றதுடன் எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் பெற்றுக் கொண்டது.

அண்மையில் அமைச்சர் அதா வுல்லா அரசியலமைப்பில் புதிய சீர்திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு முயற்சித்தார். அதனை எமது தலைவர் ரவூப் ஹக்கீம் எதிர் த்தார் என்பதை கூறிக்கொள்ள விரு ம்பு கின்றேன்.

மக்களால் கட்சிக்கு வாக்களி த்து வெற்றி பெற்ற உறுப்பினர் ஒருவர் வெற்றி பெற்றதன் பின்னர் தனது மனச்சாட்சிப்படியே தான் வாக்களிக்க முடியும் என்றிருந்தால் அது ஒரு ஏமாற்று வார்த்தையாகும். எனவேதான் அமைச்சர் அதாவுல் லாவின் திருத் தத்தைக் குப்பையில் வீச வேண்டும் என்று எமது தலை வர் ரவூப் ஹக் கீம் கூறியிருக்கிறார்.

பதின்மூன்றாவது திருத்தத்தின் பிரகாரம் காணி, பொலிஸ் அதி காரம் இருந்தும், எமது மக்கள் தமது சொந்தக் காணிகளில் மீள்குடி யேற் றம் செய்யும் போது கூட பல்வேறு பிரச்சினைகளையும் கஷ்டங்களை யும் அனுபவித்துக் கொண்டிருக் கின்றனர்.

இந்த நிலையில் காணி, பொலிஸ் அதிகாரம் ஒழிக்கப்பட்டால் அல்லது நீக்கப்பட்டால் நிலைமை என்னவா கும் என்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

அதிகாரம் கையிலிருக்கும் போது கூட அதனைப் பிரயோகிக்க முடி யாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நாம் அந்த அதிகாரம் கைவிட்டுப் போன பின்னர் எதனைச் சாதிக்கப் போகிறோம் என்றார். (அ-2)

# போலி ஆவணங்களை தயாரித்த பிரதான சந்தேக நபர் கைது

கொழும்பில் போலி ஆவணங்க ளைத் தயாரித்து காணி விற்பனை செய் யும் மோசடியுடன் தொடர்புடைய பிர தான சந்தேக நபரை கைது செய்யும் நட வடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொழும்பின் பல பகுதிகளிலும் போலியான ஆவணங்களைத் தயா ரித்து அவற்றை விற்பனை செய்துள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. பிரதான சந்தேக நபருக்கு இரண்டு பேர் ஒத்து ழைப்பு வழங்கி வருவதாக தெரிவிக் கப்படுகிறது.

போலி ஆவணங்களைத் தயா ரித்தல் மற்றும் கொள்வனவாளர் களை இணைத்தல் ஆகிய நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொள்வதாக விசார ணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அண்மையில் பம்பலப்பிட்டி பிர தேசத்தில் அமைந்துள்ள 40 பேர்ச் காணியை இரண்டு பேருக்கு தலா 90 இலட்சம் ரூபாவிற்கு இந்த சந் தேக நபர் விற்பனை செய்துள்ளார். இந்தக் காணி உறுதியை தமிழர் ஒரு வர் யாழ்ப்பாண வங்கியொன்றில் அடகு வைத்திருந்ததாகவும், காணி மீட்கப்படாத காரணத்தால் வங்கி காணியை சுவீகரித்துக் கொண்டுள்ள தாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

காணிக் கொள்ளையுடன் தொடர் புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள தாகவும், பிரதான சந்தேக நபரைக் கைது செய்யும் நோக்கில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம் பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகி றது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழுவின் 53 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு முஸ்லிம் சமூகம் தொடர்பான பிரச்சினைகள், இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான விடயங்கள், மனித உரிமை, சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் அடங்கலான நல்லிணக்க ஆணைக்குழுவின் 53 பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க சம்பந்தப்பட்ட அமைச் சுக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.**

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை முன்னெடுப்பது தொடர்பான தேசிய செயற்பாட்டு திட்டத்தைத் துரிதப்படுத்துவது குறித்தும் அதன் தற்போதைய முன்னேற்றம் குறித்தும் ஆராயும் விசேட கூட்டம் மகாவலி அதிகார சபை கேட் போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் தலைமையில் நடைபெற்றது.

இந்தப் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியிருந்தது.

இதன்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தும் தேசிய செயற்றிட்டத்தில் உள்ளடங்கும் 21 அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள தலைவர்களினால் தமது நிறுவனங்களினூடாக பரிந்து ரைகள் அமுலாகும் விதம் குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

தேசிய செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய நல்லிணக்க ஆணைக்குழுவின் இணைய த்தளம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டதோடு அதில் புதிய விபரங்களை உள்ளடக்குவதன் அவசியம் குறித்து ஜனா திபதியின் செயலாளர் இங்கு விளக்கியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் தேசிய செயற்றிட்டத் தில் மேலும் 53 பரிந்துரைகளை உள்ளடக்கி அவற்றை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அண்மையில் அனு மதி அளித்திருந்தது. அவற்றை அமுல்படுத்த தேவை யான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப் பட்ட அமைச்சுக்களுக்கு லலித் வீரதுங்க அறிவித்தார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்து கையில் அமைச்சு மட்டத்தில் எழும் பிரச்சினைகளை துரிதமாக தீர்த்து அவற்றை முன்னெடுக்குமாறும் அவர் இங்கு ஆலோசனை அளித்தார். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் உள்ளடங்காத ஆனால் அரசாங்கத்தினால் செயற்படுத் தப்படும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான திட்டங்களில் உள்ளடங்கும் விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு அவர் சகல அமைச்சுக்களுக்கும் ஆலோசனை வழங்கினார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசா ங்கம் குறுங் கால, மத்திய கால் மற்றும் நீண்ட கால திட்டங்களாக செயற்படுத்தி வருகின்றது.

இவற்றை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியின் செயலாரின் தலைமையில் தேசிய செயற்பாட்டு குழுவொன்றை நியமித்துள்ளது தெரிந்ததே. (அ-2)


ENGLISH

அனைவரும் பேச கடினப்படும் ஆங்கிலமொழியை எங்களுடன் வசப்படுத்தி சரளமாக பேசுங்கள்

100% success in Speaking

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

20.07.2013 காலை 10.30 மணி
(சனி/ஞாயிறு தினங்களில் 10.30 - 01.00 வரை)

22.07.2013 @ 4.15 P.M
(திங்/புதன் தினங்களில் மாலை 4.15-06.15 வரை)

IELTS/ A1,B1,B2/ SINHALA/ FRENCH/DUTCH

FEEL THE BRILLIANT FUTURE
E-CITY
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
372D, பருத்தித்துறை வீதி,
அனைப்பந்தி, யாழ்.
0212217106 / 0774924166271
(சி/4015)


## அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

### உப அலுவலகம், ஏழாலை.

### ஆதனப் பெயர்மாற்றம்

**வட்டாரம் 07, கொல்ல கடவை வீதி, ஆதன இலக்கம் 61/4**
**ஆதனப் பெயர் நாகநாதர் கைம்பெண் அன்னப்பிள்ளை**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 07 கொல்லக் கடவை வீதியில் 61/4 ஆம் இலக்க ஆதனம் நாகநாதர் கைம்பெண் அன்னப்பிள்ளை எனும் பெயரில் எமது பதிவேட்டில் உள்ளது. இவ்வாதனத்தை பத்மராசன் பெண் வினோதினி என்பவர் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். ஏழாலை கிழக்கு, ஏழாலை, 'மகிலடியும் சுடுகாடும்' நிலப்பரப்பு 02 என்ற ஆதனம் 18.09.2002 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு க.பரமநாதன் மூலம் எழுதப்பட்ட 4435 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் பத்மராசன் பெண் வினோதினிக்கு வந்தடைந்துள்ளது. இவ்வாதனத்தை சிவகுரு சற்குணமும் பெண் முத்துராணியும் தமது புதல்வி பத்மராசன் வினோதினிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட ஆதனத்தை பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பத்மராசன் பெண் வினோதினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எந்த விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தி.பிரகாஷ்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

*17.07.2013*
(3382)

## ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் அதிகாரிகளால் வழங்கப்படும் விளக்கவுரையாடல்!

ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் அதிகாரிகளினால் லொத்தரி வீசா (கிரீன் காட், Green Card Lottery Visa) நிகழ்ச்சி பற்றிய விளக்கவுரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி நகரங்களில் நடை பெறவுள்ளது. இலவசமாக எவ்வாறு விண்ணபிப்பது பற்றிய விளக்கங்கள் தமிழ், சிங்கள மொழி பெயர்ப்புடன் வழங்கப்படும்.

அனைவருக்கும் அனுமதி இலவசம். விளக்கவுரையாடலின் முக்கிய குறிப்புகள் கையடக்க தொகுப்பாக இலவசமாக வழங்கப்படும்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி |
|---|---|
| இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் | இடம்: கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபம், கிளிநொச்சி |
| திகதி: ஜூலை, 19 2013, நேரம்: மாலை 4:00 மணி | திகதி: ஜூலை, 20 2013, நேரம்: காலை 11:00 மணி |

(சி/3945)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.06.2012 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 10.08.2013 இலிருந்தும் 31.07.2012 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் எதிர்வரும் 07.09.2013 இலிருந்தும் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி. | நாவலர் வீதி. |
| | மானிப்பாய். |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | --- |
| நெல்லியடி | --- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-4014)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>உயரம்: 5'4"<br>கி.பா : 51 சூ,செவ் 8<br>தகைமை/தொழில்: A/L<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர் தனியார்<br>தொ.இ:B2042 | பிறப்பு: 1978 இந்து(Kuyavar)<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>உயரம்: 5' கி.பா : 44.25<br>தகைமை/தொழில்: BA<br>ஆசிரியை<br>சைவபோசனம்<br>தொ.இ: G323 |
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா : 74.5<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: BA<br>UK Not PR<br>தொ.இ:B2044 | பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: சதயம் 4<br>உயரம்: 5' 3"<br>கி.பா : 14.25 செ 2<br>தகைமை/தொழில்: BSc<br>முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ:G2041 |
| பிறப்பு: 1974 RC (Barber)<br>நட்சத்திரம்: சதயம் 1<br>உயரம்: 5' 7" செ 4<br>தகைமை/தொழில்: O/L<br>வர்ணம் தீட்டுபவர்<br>தொ.இ:B2045 | பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா : 14<br>உயரம்: 5' 1"<br>தகைமை/தொழில்: MSc<br>Computer Instructor & Designer<br>சைவபோசனம்<br>தொ.இ:G2043 |
| பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L<br>தையல் சொந்தம்<br>தொ.இ:B2048 | பிறப்பு: 1986 இந்து(V)<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா : 36.25 செ 1<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: B.Sc Hons<br>தொ.இ: G2046 |


சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பல குறைபாடுகளுடன் இயங்கும்

# கொக்கிளாய் உப அஞ்சல் அலுவலகம்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

**நூறுவருடங்கள் பழைமைவாய்ந்த கொக்கிளாய் உப அஞ்சல் அலுவலகம் பலகுறைபாடுகளுடன் இயங்கிவருகின்றது. இடப்பெயர்வின் பின்னர் 2011 ஆம் ஆண்டு மீள்குடியேறியுள்ள கொக்கிளாய் பிரதேசத்தில் உப அஞ்சல் அலுவலகம் ஒன்று இயங்கிவருகின்ற போதிலும், இது சொந்தக் காணியும் கட்டமும், போதிய வளங்களுமின்றியே சேவையாற்றி வருகின்றது.**

கொக்கிளாய் பிரதேசத்தில் 1900 ஆண்டளவில் உப தபாற்கந்தோர் என்ற பெயருடன் உப அஞ்சல் அலுவலகம் இயங்கி வந்தது.

ஆயினும், யுத்தத்தினால் 1984 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை ஒட்டுசுட்டான் பிரதேசத்திலும், 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை சிலாவத்தையிலும் இது இயங்கி வந்தது.

இவ்வாறு இயங்கி வந்த தபாலகம் 27 வருடங்களின் பின்னர் மீண்டும் சொந்தக் கொக்கிளாய் கிராமத்தில் கொக்கிளாய் மேற்கு கிராம சேவகர் பிரிவில் 2011. 10.28 ஆம் திகதி முதல் இயங்கி வருகின்றது.

கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய் வடக்கு, கொக்குத் தொடுவாய் தெற்கு, கொக்குத் தொடுவாய் மத்தி ஆகிய ஆறு கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இவ் உப அஞ்சல் அலுவலகத்தின் சேவையையே நம்பியுள்ளனர்.

ஆயினும் உப அஞ்சல் அலுவலகத்திற்கு தபாலதிபர் உள்ளபோதும், அவர் பதில் கடமையாற்றி வருவதோடு இங்கு அவருடன் இரண்டு ஊழியர்கள் மாத்திரமே கடமையாற்றுகின்றனர். சேவையை நிறைவாகச் செய்வதற்கு நிரந்தர தபாலதிபரும் இன்னுமொரு ஊழியரும் மேலதிக தேவையாகவுள்ளது.

அத்தோடு, உப அஞ்சல் அலுவலகம் நிரந்தரமான காணியில் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

மேலும் தளபாட வசதிகள், கணனி வசதிகள், வாகனத் தரிப்பிட வசதி, தபால திபர், ஊழியர் விடுதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, அலுவலகத்திற்கு தேவையான இலத்திரனியல் உப கரணங்கள் என்பன தேவையாக வுள்ளன.

வீதியோரங்களில் தபாற் பெட்டிகள் இதுவரை அமைக்கப்படவில்லை. மக்கள் செறிவான பகுதிகளிலும், ஒவ்வொருகிராம சேவகர் பிரிவிலும் மொத்தம் 8 வீதியோர தபாற் பெட்டிகள் அமைக்கப்பட வேண்டும்.

எனவே, உப அஞ்சல் அலுவலகத்திலுள்ள குறைபாடுகளை இனம் கண்டு, சம்பந்தப்பட்ட தரப்பினர் தீர்வினை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9-267)

## தற்செயல் நிவராண கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் கரைச்சி மற்றும் பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 10 பேருக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவுக்கான காசோலை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கரைச்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த, ஞானச்சந்திரவேல் உருத்திரா தேவி (இல. 08 சிவநகர் உருத்திரபுரம்), அருணாசலம் கதிராய் (ஊற்றுப் புலம் கிளிநொச்சி), இராசகுமார் லட்சுமி (இல .55 செல்வநகர் கிளிநொச்சி), வை.சந்திரலிங்கம் (இல.82-10 ஆம் வாய்க்கால் உருத்திரபுரம்), தருமராசா விதுனன் (இல.108 உதயநகர் கிழக்கு கிளிநொச்சி) ஆகிய 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு, பூநகரி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களான, பஞ்சலிங்கம் சுதாகரன் (குழந்தை யேசு கோவில் வீதி, நாச்சிக்குடா), தனபாலசிங்கம் மனோன்மணி (இல. 175 சோலை, பல்லவராயன் கட்டு), மாதன் செல்வராசா (சூரியாலை நாகபடுவான் பல்லவராயன் கட்டு), மாரிமுத்து ஞானசேகரம் (கிருஸ்ணன் கோவில் முழங்காவில்), சிவராசா இராசேந்திரா (விஜி வீதி, முழங்காவில்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பெயர், முகவரியை உடையவர்கள் குடும்ப அட்டை, அடையாள அட்டை என்பனவற்றுடன் குறித்த பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

இக் காசோலை எதிர்பாராத தீ விபத்து, கடும் காற்று, மழை வெள்ளப் பெருக்கு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களுக்கே வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9-254)

## மின்சாரம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது

### மக்கள் சுட்டிக்காட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள செல்வபுரம் கிராமத்தில் மின்சாரம் வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.




செல்வபுரம் கிராமத்தில் 2010. 05. 04 ஆம் திகதி மீள்குடியேறி 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு மின்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ள போதிலும் 155 பேருக்கு மட்டுமே வீட்டு மின்னிணைப்பு பெற்றுக் கொடுக் கப்படவில்லை. இலங்கை மின்சார சபையின் முல்லைத்தீவு கிளையிடம் இது தொடர்பில் மக்கள் கேட்ட போது வீட்டு மின்னிணைப்புக்காக போடப்படும் மின்கம்பங்களுக்கு பணத்தை அறிவிடுமாறு அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடி யேற்றப்பட்டுள்ள மக்களிடம் பணத்தை அறவிடுமாறு பணிப்பது எவ்விதமான நியாயம் என பாதிக்கப்பட்டவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

ஆகவே, கிராமத்தில் இதுவரை மின்சாரத்தை பெறமுடியாமல் உள்ள மக்களுக்கு பாரபட்சம் காட்டாமல் மின்னிணைப்புக்களை செய்து மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்க முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர், முல்லை. மின்சார சபையினர் ஆகியோர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9-267)







வவுனியா மாவட்ட விளையாட்டுப் போட்டி வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிதிகள் அழைத்து வரப்படுவதையும் வெற்றி பெற்ற பிரதேச செயலக பிரிவு அணியினருக்கு வெற்றிக்கேடயம் வழங்கப்படுவதையும் கலை நிகழ்வொன்றையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூந்தோட்ட செய்தியாளர்)

## மலசலகூடம் அமைக்குக

கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மக்கள் மலசலகூட வசதிகள் இன்மையால் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய் மேற்கு, கிழக்கு கிராமங்களில் சுமார் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் 199 குடும்பங்களுக்கு என்.ஆர்.சி யினால் மலசல கூடங்களுடன் தற்காலிக வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. பின்னர் 47 குடும்பங்களுக்கு சோபா நிறுவனத்தால் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமையால் முல்லை. அரசாங்க அதிபர் தீர்வைப்பெற்றுத்தர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-9-26)

# கிராம அபிவிருத்தி சங்க புதிய நிர்வாக தெரிவு இடம்பெறவில்லை

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வற்றாப்பளை கிராமத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வற்றாப்பளை கிராமத்தில் மக்கள் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டு 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கிராம அபிவிருத்தி சங்கத்தின் பழைய நிர்வாகம் இருக்கின்றபோதும் அதன் செயற்பாடுகள் மந்த கதியிலே இடம்பெறுகின்றன. மேற்படி சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு 2 வருடத்திற்கு ஒரு தடவை கட்டாயம் இடம் பெறவேண்டும். ஆனால், 10 வருடங்களுக்கு மேலாக புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெறவில்லை.

மீள்குடியேற்றத்தின் பின்னர் மாதர் சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு அதன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில் கிராம அபிவிருத்தி சங்கம் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படாமலும் இயங்காமலும் இருப்பதையிட்டு மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிராமத்தில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டம், மின்சாரம் என்பன முழுமையாக வழங்கப்படவில்லை. அத்தோடு மாதர் அபிவிருத்தி சங்கம், கமக்கார அமைப்பு, மீன்பிடிச் சங்கம், கிராம அபிவிருத்தி சங்கம் போன்றவற்றுக்கு சொந்தக் காணிகளோ, கட்டடங்களோ அமைக்கப்படவில்லை. இவ்வாறான பிரச்சினைகளை இனங்கண்டு கிராமத்தை அபிவிருத்திக்கு இட்டு செல்வதே கிராம அபிவிருத்தி சங்கத்தின் கடமையாகும்.

எனவே, கரைதுறைப்பற்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும், கிராம சேவையாளரும் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

கிராம அபிவிருத்தி சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவில் இளம் தலைமுறையினரை உள்வாங்குவதன் ஊடாக கிராமத்தின் அபிவிருத்தியை சிறப்பாக கொண்டு நடத்த முடியும் என ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-9-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் வாயை மூட உலை மூடி உண்டோ!
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அளவுக்கு அதிகமான அரசியல் விமர்சனங்கள்

கதைகட்ட நாலுபேர் இருந்துவிட்டால் கண்ணகி வாழ்விலும் களங்கம்தான் என்றார் கவியரசர் கண்ணதாசன்.

அப்படியானால் கதைகட்டுவதைத் தடுப்பது யார்? என்ற கேள்வி ஏற்படவே செய்யும்.

இதற்குப் பதில் கதைகட்டுபவர்களை யாராலும் கட்டுப்படுத்தி விடமுடியாது என்பதாக இருக்கும். மற்றவரின்ர கதை நமக்கு என்னத்திற்கு என்பதை தொடக்கவுரையாகக் கொண்டே பிறர் பற்றிப் பேசும் புதுப்பண்பாடு எங்களிடம் ஆழ வேரூன்றி விட்டது. இதனால் துன்பப்படுபவர்களும் வேதனைப்படுபவர்களும் ஏராளம்.

கதைகட்டுவதைத் தடுப்பதற்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு மூலம் அவரவர் மனச்சாட்சி ஆகும்.

கடவுள் இருக்கிறார். அவர் நாம் செய்கின்ற தருமங்களை கண்காணிக்கிறார். நாங்கள் தீயது செய்தால் பாவமும் நன்மை செய்தால் புண்ணியமும் நமக்குக் கிடைக்கும்.

நாம் இந்தப் பிறப்பில் செய்கின்ற ஒவ்வொரு பாவச் செயலுக்கும் தண்டனை உண்டு. நாம் பாவம் செய்வோமாயின் மரணத்தின் பின்பான எங்கள் வாழ்வு நரகத்தில் என்ற நம்பிக்கைகளும் அவற்றின் மீதான உறுதிப்பாடுகளும் எங்களைப் பாவ காரியங்களில் இருந்து தடுக்கின்றன.

இதன் காரணமாகவே இந்த உலகில் தர்மமும் நீதியும் கடைப்பிடிக்கப்படுவதற்கு காரணமாகின்றது.

ஆயினும், இலங்கையில் தமிழர்களைப்பொறுத்தவரை அவர்களிடம் கடுமையான விமர்சனங்கள் புரையோடிப்போய் இருப்பது வேதனைக்குரியது.

சில சந்தர்ப்பங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளில் இருந்து நாம் விலகிக்கொள்வதற்கும் அரசியல் தலைமைகளில் நேர்மையானவர்களை நாம் இழப்பதற்கும் எங்களிடமிருந்த கடுமையான விமர்சனங்களே மூல காரணம் எனலாம்.

எதற்கும் அரசியற் சாயம் பூசுகின்ற ஒருவகைப் பழக்கமும் ஒருவர் ஒன்றைக் கூறிவிட்டால் அது தொடர்பான நிலைப்பாடுகளை ஆராயாமல் அதை உண்மையென நம்பி கதைக்கின்ற நிலைமைகளும் எங்கள் முன்னேற்றத்திற்கு குந்தகமாகி உள்ளது.

இத்தகைய சூழ்நிலை யார் மீதும் நம்பிக்கையை ஏற்படுத்தவிடப்போவதில்லை என்பது தெளிவு.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்பொருள் காணும் அளவிற்கு நாம் முன்னுரிமை கொடுக்காதவரை, எல்லாவற்றையும் எல்லோரையும் விமர்சிக்கப் போகின்றோம் என்பது நிறுத்திட்டமான உண்மை.

இத்தகைய விமர்சனங்களை - கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டு அதன்மூலம் தங்கள் காரியங்களை சாதிக்க நினைப்பவர்கள் தங்களை மகா கெட்டிக்காரர்கள் என்று கற்பனை செய்துகொள்ளலாம்.

ஆனால், இதேபோன்ற விமர்சனங்கள் அவர்களுக்கும் காத்திருக்கிறது என்பதை இவர்கள் அறியாமல் இருப்பதுதான் மடமைத்தனம். எதுவாயிம்னும் கண்டபாட்டில் விமர்சிக்கின்ற உதவத்த பழக்கம் எங்களிடம் இல்லாமல் போகும் வரை எங்களில் நல்லதையும் கெட்டதையும் பிரித்தறிய முடியாமல் போகும் என்பது நிஜம்.

# தமிழ்மண்ணை பாதுகாக்க தலைவர்கள் உருவாகிக்கொண்டுதான் இருக்கின்றனர்

## யோகேஸ்வரன் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மண்ணையும் இந்து சமயத்தையும் பாதுகாப்பதற்கு தலைவர்கள் உருவாகிக்கொண்டுதான் இருக்கின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவருமான சி.யோகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

சுவாமி விபுலானந்தர் விழா நேற்று முன்தினம் மாலை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புப் பேருரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் மன உணர்வு ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் இணையவேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

அதனால்தான்விபுலானந்தர்விழாவை யாழ்ப்பாணத்திலும் ஆறுமுக நாவலர் விழாவை மட்டக்களப்பிலும் நடத்துமாறு இந்துமாமன்றத்திடம் கோரினேன். அது தற்போது நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

விபுலானந்தரது பெருமை மட்டக்களப்பு மாவட்டத்தின் பெருமையையே எடுத்துக்காட்டும்.

சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்பு மாவட்டத்திலே காரைதீவு எனும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதை பாடசாலை மாணவர்கள் முதற்கொண்டு எல்லோரும் அறிவர்.

ஆனால், தற்போது அவரைப் பற்றிக் கூறுவதாயின் முன்பு மட்டக்களப்பு மாவட்டத்தையும் தற்போது அம்பாறை மாவட்டத்தையும் பிறப்பிடமாகக் கொண்டவர் எனக்கூறவேண்டிய அளவுக்குப் புதியதொரு மாவட்டத்தை உருவாக்கி 1963 ஆம் ஆண்டிலிருந்து சுவாமி விபுலானந்தரின் பிறப்பிடத்தையே மாற்றியமைத்துவிட்டனர்.

சுவாமி விபுலானந்தர், ஆறுமுகநாவலர் ஆகியோர் வாழ்ந்த காலம் இலங்கையும் இந்தியாவும் அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்த காலப்பகுதியாகும்.

அது எமது தமிழ்க்கலாசாரம். கிறிஸ்தவ கலாசாரமாகவும் தமிழ்மொழி ஆங்கில மொழியாகவும் இந்து வழிபாடுகள் கிறிஸ்தவ வழிபாடுகளாகவும் மாற்றமடையும் காலப்பகுதியாகவும் இருந்தது.

ஆயினும் காலத்துக்குக் காலம் அந்நியர் அடக்குமுறையிலிருந்து தமிழ் மண்ணைக்காப்பதற்கு தமிழ்த் தலைவர்கள் உருவாகிக்கொண்டுதான் இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## பட்டதாரி பயிலுநர்களுக்கான நிரந்தர நியமனம் எப்போது?

### பட்டதாரி பயிலுநர்கள் காத்திருப்பு

நாடளாவிய ரீதியில் ஒரு வருட பயிற்சி காலத்தை பூர்த்தி செய்த பட்டதாரி பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் அறிவிக்கப்பட்ட போதிலும் இன்னமும் வடமாகாண பட்டதாரி பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். மேலும் டிப்ளோமா கற்கைநெறி மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஆறு நாட்கள் பயிற்சியுடன் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு வருடத்தை பூர்த்தி செய்த தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஒரு வாரத்திற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்கான எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர். தொடர்ந்தும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமை காரணமாக நாம் வேலை செய்யும் அலுவலகங்களில் கீழ்மட்ட வேலைகளை மேற்கொள்பவர்களாக இருப்பதால் மன உளைச்சலுக்குள்ளாவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மாதாந்த படியான 10 ஆயிரம் ரூபா எமது வாழ்க்கைச்செலவு மற்றும் இதர தேவைகளுக்குபோதுமானதாகஇல்லை. இந்நிலை தொடர்ந்தும் நிலவுமானால் நாம் இன்னும் பல அவல நிலைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வாக்குறுதிகளை வழங்குவதோடு மட்டும் நின்று விடாது எமக்குரிய நிரந்தர நியமனங்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளையும் விரைந்து எடுப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப்பரீட்சையில் யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியூடாக முதலாம், இரண்டாம் முறை தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 8.30 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (அ-5)

## விபத்தில் பலியான குழந்தை இலங்கையைச் சேர்ந்தது

புகலிடக்கோரிக்கை படகு விபத்தில் உயிரிழந்த குழந்தை இலங்கையைச் சேர்ந்தது என அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தோனேசியாவுக்கும் கிறிஸ்மஸ் தீவுகளின் வட பகுதிக்கும் இடையிலான கடற்பரப்பில் படகு விபத்துக்குள்ளானது.

இந்தப் படகில் பயணம் செய்த 88 பேர் உயிருடன் மீட்கப்பட்டதுடன் 8 பேரைக் காணவில்லை. காணாமற்போன எட்டுப் பேரும் உயிரிழந்திருக்கலாம் என அவுஸ்திரேலிய அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். காணாமற்போன 8 பேரில் 2 குழந்தைகளும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## சிறைச்சாலை மாளிகை ஜனாதிபதியிடம் கையளிப்பு

195 வருடங்கள் சிறைச்சாலையாகப் பயன்படுத்தப்பட்டு வந்த சரித்திரப் பிரசித்த பெற்ற எஹல பொல மாளிகை புராதன தேசிய சொத்தாக பாதுகாக்கப்படுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கிய இந்த மாளிகையை புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று முன்தினம் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இதேவேளை கண்டிக்கு நேற்று முந்தி னம் விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போகம்பரை விளையாட்டரங்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள உடற்பயிற்சி நிலையத்தை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்ததோடு கண்டி நகரின் மத்தியில் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதியமைச்சர் அமரர் அனுருத்தரத்வத்தையின் உருவச்சிலையையும் உத்தியோக பூர்வமாக திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார். (அ-2)


## பராசக்தி வித்தியின் தமிழ்மொழி தினம்

யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய தமிழ் மொழித்தின விழா இன்று புதன் கிழமை முற்பகல் 9மணிக்கு வித்தியாலய அரங்கில் பாடசாலை அதிபர் கோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் ஜீ.வி. இராதாகிருஸ்ணனும், ஆசிரிய கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம், தீவக வலய தமிழ் பாடப்பிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் க. உருத்திரகுமாரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தராசா, அல்லைப்பிட்டி கிராம சேவையாளர் சி. இரட்னேஸ்வரன், அல்லைப்பிட்டி சமூக ஆர்வலர் இ.மகிதரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-5)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



### நடிப்புக்காகக்கூட பொய் பேசாதே!

- தாமிரப் பத்திரத்தை நாள்தோறும் துலக்கவேண்டும். இல்லையேல் அதில் களிம்பு ஏறிவிடும். மனமும் தாமிரம் போன்றது.
- நாள்தோறும் பிரார்த்தனை, நல்ல எண்ணங்களால் அதைத் துலக்கவேண்டியது அவசியம். தாய்மீதும் தந்தை மீதும் பக்தியில்லாத ஒருவனுக்கு தெய்வபக்தி ஒரு நாளும் வராது.
- தாயும் தந்தையும் துன்மார்க்கர்களாக இருப்பினும் பிள்ளைகள் அவர்களுக்குத் தொண்டு செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.
- எல்லா மனிதர்களிடத்தும் இறைவன் இருக்கிறான். ஆனால் இறைவனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதுதான் மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள வேறுபாடு.
- நடிப்பதற்காகக்கூட பொய்பேசுதல், திருடுதல் போன்ற பொருந்தாத செயல்களைச் செய்யக்கூடாது. நடிப்பதே நாளடைவில் நம் மனத்தைக் கெடுத்துவிடும்.
- பிறரிடம் நாம் என்ன எதிர்பார்க்கிறோமோ அதையே பிறருக்குச் செய்ய வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. நிச்சயம் நாம் நல்லதை மட்டுமே எதிர்பார்ப்போம்.
- அதனால் நாமும் பிறருக்கு நல்லவை மட்டுமே செய்யவேண்டும். ஒருவனுடைய குணநலன்கள் அவனுடைய சகவாசத்தைப் பொறுத்து அமைகிறது.
- அதேபோல தன் குணத்திற்கேற்ற நண்பர்களையே ஒருவன் நாடுகிறான். ஆக குணமும் நட்பும் ஒன்றையொன்று சார்ந்தவையாக இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுள்ளேன்




## சொல்கிறார் டேவிட் வோணர்

முன்பிருந்ததை விட தற்போது முதிர்ச்சியடைந்துள்ளதாக எண்ணுவதாக கூறும் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோணர் தனது தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிரடித் துடுப்பாட்ட வீரரான டேவிட் வோணர், அண்மைக் காலத்தில் சர்ச்சைகள் பலவற்றிலும் சிக்கி வருகிறார்.

இறுதியாக, சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில். வைத்து இங்கிலாந்து வீரர் ஜோ றாட்டைத் தாக்கியமை தொடர்பான சர்ச்சையில் அவர் சிக்கியிருந்தார்.

கடந்த மாதம் கடினமான மாதமாக அமைந்திருந்ததாகக் குறிப்பிட்ட டேவிட் வோணர், ஊடகங்களில் எழுதப்படும் விடயங்களை வாசிப்பது கடினமானதாக அமைந திருந்ததாகக் குறிப்பிட்டார்.

எனினும், தவறுகளை மேற்கொள்ளும் போது, அத்தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வது அவசியமானது எனக் குறிப்பிட்ட டேவிட் வோணர், தனது தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுள்ளதாகவும், முன்பை விட முதிர்ச்சியடைந்துள்ளதாக எண்ணுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பதவி நீக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தரின் பதவி விலகலில் தனது நடவடிக்கைகளும் நேரடியாகத் தாக்கம் செலுத்தியிருந்தன எனக் குறிப்பிட்ட டேவிட் வோணர், அதற்கான குற்ற உணர்ச்சியைக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு, இன்னுமொருமுறை தவறு செய்யும்போது அணியிலிருந்து தான் வெளியேற்றப்படுவார் என்பதை அறிவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் கிரி.அணியின் தலைமைத் தேர்வாளராக மொயின் கான் நியமனம்


பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமைத் தேர்வாளராக அந்நாட்டின் முன்னாள் தலைவரும், விக்கெட் காப்பாளருமான மொயின் கான் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணி படு தோல்வியடைந்தது. இதனால், அணித் தேர்வாளராக இருந்த இக்பால் காசிம் கடந்த மாதம், தனது பதவியை இராஜினாமா செய்தார். இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மொயின் கான் பெயரை தலைமைத் தேர்வாளராக அறிவித்தது.

41 வயது நிரம்பிய மொயின் கான், அணியின் இளம் தலைமை தேர்வாளர் என்ற பெருமையைப் பெற்றார். இது குறித்து மொயின் கான் கூறுகையில், 'பாகிஸ்தானில் கிரிக்கெட்டை மக்கள் தீவிரமாக நேசிக்கின்றனர். அதனால், அணியின் தலைமைத் தேர்வாளாராக இருப்பது சவாலான விஷயம்.

இருப்பினும், 2015 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிக்கு அணியைத் தயார் செய்வது குறித்து தெளிவான பார்வையுடன் உள்ளேன். பாகிஸ்தானில் திறமைவாய்ந்த வீரர்கள் பலர் உள்ளனர்' என்று மொயின் கான் தெரிவித்தார்.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தற்காலிக தலைவர் நஜம் சேதியை சந்தித்து மொயின் கான் ஆலோசனை நடத்தினார். இவர், பாகிஸ்தான் அணிக்காக 69 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 219 ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டங்களில் விளையாடியுள்ளார்.




## ஐபிஎல் போல காற்பந்து போட்டியும்



ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளைப் போல காற்பந்து போட்டியையும் நடத்த முடிவு செய்யப்பட்டது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இந்திய காற்பந்து சம்மேளனம் மற்றும் ஐஎம்ஜி-ரிலையன்ஸ் இடையே நேற்று நடைபெறுவதாக இருந்தது. இருந்தும் இக்கூட்டம் தற்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## அன்டர்சனுக்கு குக் பாராட்டு



ஆஷஷ் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் வேகப் பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் வெளிப்படுத்திய திறமை குறித்து அலிஸ்டெயார் குக் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

ஜேம்ஸ் அண்டர்சன் கைப்பற்றிய 10 விக்கெட்டுகளின் உதவியுடன் முதலாவது போட்டியில் 14 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது.

83ஆவது டெஸ்ட்டில் விளையாடியுள்ள ஜேம்ஸ் அண்டர்சன் போட்டியொன்றில் 10 அல்லது 10 இற்கும் அதிகமான விக்கெட்டுகளை இரண்டாவது முறையாக கைப்பற்றியுள்ளார். பிரட் ஹடின் மற்றும் ஜேம்ஸ் பட்ரின்சன் ஆகியோர் இறுதி விக்கெட்டுக்காக 65 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்து அணிக்கு சவால் விடுத்திருந்தனர்.

எனினும் நடுவரின் தீர்ப்பினை மீளாய்வு செய்யும் முறைமை மூலம் ஜேம்ஸ் அண்டர்சனின் பந்துவீச்சில் இறுதி விக்கெட்டாக பிரட் ஹடின் ஆட்டமிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவுஸ்திரேலிய அணியின் வெற்றி பெறும் கனவு தகர்ந்திருந்தது.



## 'ஹெலிகொப்டர் ஷொட்டை' அறிமுகப்படுத்தியவருக்கு தோனி உதவி

'ஹெலிகொப்டர் ஷொட்டை' தனக்கு அறிமுகப்படுத்திய சந்தோஷ் லாலுக்கு இந்திய அணித் தலைவர் மகேந்திர சிங் தோனி மருத்துவ உதவி செய்து வருகிறார்.

கணைய அழற்சியால் அவதிப்பட்டு வந்த சந்தோஷ் லால், ராஞ்சியிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் டில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தோனியைத் தவிர, சந்தோஷின் ஏனைய நண்பர்களும் அவருக்கு உதவ முன்வந்துள்ளனர்.

ரஞ்சி கிரிக்கெட் போட்டியில் சந்தோஷ் லால், தோனியுடன் இணைந்து விளையாடியது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் கிரேம் ஸ்மித்



உபாதைக்கு உள்ளாகியுள்ள தென்னாபிரிக்காவின் டெஸ்ட் கிரிக்கெட் அணித் தலைவர் கிரஹம் ஸ்மித் அணிக்கு மீண்டும் திரும்பவுள்ளார். ஒக்டோபர் மாதம் பாகிஸ்தான் அணிக்கெதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் கிரஹம் ஸ்மித் விளையாடவுள்ளார்.

உபாதை காரணமாக கடந்த ஐந்து மாதங்களாக அவர் போட்டிகளில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூனியன்ஸ் வெற்றி

பாலகிருஸ்ணன் வெற்றிக் கிண்ணத்திற்காக மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் 19ஆவது தகுதிகாண் போட்டி ஸ்ரான்லி அணிக்கும் யூனியன்ஸ் அணிக்கும் இடையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யூனியன்ஸ் அணி, ஸ்ரான்லி அணியை 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 15 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது.

கனன்ராஜ் 13 , செல்வராசா 17, றஜனிகாந் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களை பெற்றனர்.

அருன் 03, தயாளன் 02, சுயந்தன் 02 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 4.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 78 ஓட்டங்களை பெற்றனர்.

யதீஸ் கண்ணா ஆட்டமிழக்காது 31 ஜான்சன் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களை பெற்றனர்.

# மானிப்பாய் பரீஸ் அரை இறுதிக்கு தெரிவு

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III க்கான போட்டிக்கு யாழ்.நகரில் ஓர் அணியை தெரிவு செய்வதற்கு யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் ஓர் தகுதி காண் போட்டிகளை நடததி வருகிறது.

அதற்கமைவாக கடந்த 13-ம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் பரீஸ் அணிக்கும், கிறாஸ்கொப்பர்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி, கிறாஸ் கொப்பர்ஸ் அணியை 68 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரை இறுதக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிபபாய் பரீஸ் அணி 38 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 195 ஓட்டங்களை பெற்றது.

நிதர்ஸன் 23, வினோத் 51, கரிகரன் 48, சுபாஸ் 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜனன்தன் 04, மதுஸன் 01, அஜித் 03, அலன்ராஜ் 01, றவிசங்கர் 01 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 35.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களை பெற்றது.

கோகுலதாஸ் 26, சரன்ராஜ் 24, கஜன் 40 ஓட்டங்களைப் பெற்றனர். கரகரன் 02, கிசோ 02, வினோத் 03, துவாரகன் 02 இலக்குகளைக் கைப்பற்றினர். இப் போட்டி ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியினை தொடர்ந்து எதிர்வரும் 20-ம் திகதி திருநெல்வேலி சீ.சீ.அணிக்கும் அரியாலை செனறல் அணிக்கும், 21-ம் திகதி யாழ்.சென்றல் அணிக்கும், நியூஸ்ரார் அணிக்கும், 22-ம் திகதி சென்றலைட்ஸ் அணிக்கும், யூனியன்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

# அரியாலை ஐக்கிய வி.கழகம் வெற்றி



(மானிப்பாய்)

ஆறுகால்மடம் லோட்டஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட மென்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற 5 பந்து பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தியது.

82 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 2 மணிக்கு நடைபெற்றது.

முன்னதாக நடைபெற்ற அரையிறுதிப் ஆட்டங்களில் லெவின் ஸ்டார்ஸ் அணியினை 4 இலக்குகள் வித்தியாசத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், ஏபி அணியினை 16 ஓட்டங்களால் மல்லாகம் ஸ்ரீ முருகன் அணியும் வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தன.

இறுதிப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அரியாலை ஐக்கிய அணி முதலில் களத்தடுப்பினைத் தீர்மானித்தது.

அதற்கிணங்க களமிறங்கிய மல்லாகம் ஸ்ரீமுருகன் அணி 6.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 33 ஓட்டங்களை எடுத்தது.

34 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 4 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்து சம்பியனாகியது.

இச்சுற்றுப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியின் எஸ்.புனிதராஜ் உம், சிறந்த பந்துவீச்சாளராக ஏபி அணியின் ரஜஸராஜ் உம் தெரிவு செய்யப்பட்டதுடன், இறுதிப் போட்டியின் நாயகனாக அரியாலை ஐக்கிய அணியின் ஏ.எஸ். றொசானும் தெரிவு செய்யப்பட்டனர். (23)

# விக்னேஸ்...

சைகளை வெளியுலகுக்கு நியாயப்படுத்தக் கூடிய ஒருவர் கிடைத்தமை தமிழ் சமூகத்துக்கு பெருமை என்றும் ஆயர் இராயப்பு யோசப் கூறினார். யுத்தம் அழிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் சென்றும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு விக்னேஸ்வரனுடைய வருகை ஒரு புதிய பாதையாக அமையட்டும் என்று ஆயர் இராயப்பு யோசப் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து எடுத்த தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என்றும் ஆயர் ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார். (எ-11)

# வட மாகாணசபைத்...

கலந்துரையாடப்பட்டது.

வட மாகாண சபையில் கூட்டமைப்பின் சார்பில் போடடியிடவுள்ள வேட்பாளர்களை தெரிவு செய்யும்போது, அரசியல் உரிமைகளையும், அபிவிருத்தியையும் இரு கண்களாகக் கருதி பணியாற்றும் ஆளுமைமிக்க மனிதர்களையே வேட்பாளர்களாக நிறுத்த வேண்டும் என பிரஜைகள் குழுவினர் அழுத்தமாக வலியுறுத்தினர்.

பிரஜைகள் குழுவினரின் கோரிக்கைகளை ஏற்றுப் பதிலுரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தனது உரையில்,

வட மாகாண சபைத் தேர்தலின் ஆரம்ப செயல்பாடுகள் எனக்குக் கற்றுத்தந்த பாடம், தமிழ் மக்கள் என் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள் என்பதைக் கணிப்பதற்கான வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

கடந்த கால தேர்தல் வெற்றிகள் மக்கள் அரசியல் தீர்வு விடயங்களில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன. அந்த நம்பிக்கையும் தெளிவும் வட மாகாண சபைத் தேர்தலிலும் வெளிப்படவேண்டும்.

வட மாகாண சபைத் தேர்தல் வெற்றி என்பது விடியல் அல்ல, எமது அரசியல் பாதையில் ஒளிக்கீற்று மட்டுமே. நாம் அரசியலில் முழுமையான இலக்கை அடைவதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை தமிழர்கள் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். தேர்தலுக்கு அப்பால் எமது மக்களின் வாழ்வியலை அனைத்து திசைகளிலும் உரிமையுடன் முன்னகர்த்தி செல்வதற்கு நாம் நிறைய உழைக்க வேண்டும்.

நாளுக்கு நாள் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் அநீதிகளை வெற்றி கொள்வதற்காக நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் நீண்டு கொண்டே செல்கின்றன. நில ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துதல், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துதல், விதவைகளின் வாழ்வியல் மேம்பாடு, அவர்களின் பொருளாதார முன்னேற்றங்கள், மறுவாழ்வு, எமக்கே உரித்தான கலாசார மதரீதியான விழுமியங்களை பாதுகாத்தல்,

வடக்கு- கிழக்கு இணைப்புக்கான செயல் திட்டங்களை முன்நகர்த்தல், யுத்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பங்காற்றல், முன்னாள் போராளிகளின் தொழில் முயற்சிகளுக்கு உந்துசக்தியளித்தல் என்று எண்ணற்ற பணிகள் வட மாகாண சபை வெற்றியின் பின்னுள்ள கடமைகளாக இருக்கின்றன.

தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளையும், சமூக பொருளாதார அபிவிருத்தி நடைமுறைகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்படும் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் உரிமைக்காக அர்ப்பணிப்புடன் குரல் கொடுக்கும் சிவில் சமூகத்தினதும் மாவட்ட பிரஜைகள் குழுக்களினதும் கருத்துக்கள் ஆலோசனைகள் முழுமையாக உள்ளீர்க்கப்படும்.

இவ்விடயம் தொடர்பாக கூட்டமைப்பில் உள்ள ஏனைய பங்காளிக் கட்சிகளுடனும் நான் கலந்துரையாடவுள்ளேன் என அவர் பிரஜைகள் குழுவினரிடம் தெரிவித்தார். (எ-11)

# தேர்தலில்...

தேசிய சுதந்திர முன்னணி கட்சிகளின் வேட்பாளர்கள் தனித்துப் போட்டியிட்டால் வெற்றிபெற முடியாது. அவ்வாறான நிலையில் இவர்கள் ஆளுங் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடித்து வெற்றி பெறுவார்கள். பின்னர் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு சிறுபான்மை மக்களுக்கு எதிராக செயல்படுவார்கள்.

அவ்வாறானவர்களுக்கு ஆளும் கட்சியின் பட்டியலில் போட்டியிட இடமளித்தால் சிறுபான்மை வாக்கு வங்கியை இழக்க நேரிடும. எனவே இனவாதிகளுக்கு ஆளும் கட்சியின் பட்டியலில் போட்டியிட இடமளிக்கவே கூடாது என்றும் இவர் பகிரங்கமாக தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். (எ-11)

# யாருக்கும் அடி பணி...

அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்சவின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் செய்தி இணையத்தளத்துக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின் போது ஏற்பட்ட சர்வதேச நெருக்கடிகளை கவனத்தில் எடுக்காமல் யுத்தத்தைத் தொடர ஜனாதிபதி உறுதுணையாக இருந்தார்.

அதேபோன்று தற்போது 13-வது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக சர்வதேச நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியையும் ஜனாதிபதி பொருட்படுத்த மாட்டார். இந்தியா மேனனை அல்ல, இன்னும் யாரை அனுப்பி நெருக்கடி கொடுத்தாலும் எங்களது இலக்கில் மாற்றம் ஏற்படாது.

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் என்பது பாம்பின நச்சுப் பல்லைப் போன்றது. அதைப் பிடுங்கியாக வேண்டும். இதில் எந்த சமரசத்துக்கும் இடம்கிடையாது. இந்தியா உள்ளிட்ட எந்தக் கொம்பன்களுக்கும் தலைசாய்க்கப் போவது கிடையாது என்றும் அமைச்சர் விமல் வீரவன்ச உறுதிபடத் தெரிவித்துள்ளார். (எ-11)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815,
E-mail: valampurii@yahoo.com

மாபெரும் கருத்தரங்கு
A/L வரலாறு-2013
வளவாளர்கள்
R.M. சத்தியன் M.Ed (விரிவுரையாளர்)
M. சுஜிகரன் B.A
M. பத்மன் M.A (History)
S.S. தாஸ் B.A (Hons)
இடம் : D.M.I யாழ். நகர்
நேரம் : காலை 8 மணி முதல் 12 வரை
மாலை 1 மணிமுதல் 5 மணிவரை
காலம் : 21.07.2013 (ஞாயிறு) 22.07.2013 (திங்கள்)
கட்டணம் : 500/=
(C-4018)
இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக வரையறுக்கப்பட்ட அளவிலேயே அனுமதிகள் வழங்கப்படும்.

கருத்தரங்கு
தமிழ் A/L [2013]
ந. சத்தியவேந்தன் B.A [Hons] M.Phil
இடம் : பொருளியற் கல்லூரி.
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 18, 19, 23ஆம் திகதிகளில்
நேரம் : காலை 9 மணி
பாடக்குறிப்பேடுகள் வழங்கப்படும்.
வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
(C-4020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைப்பிரசில் பிந்திய அதிரடி
மாதம் ஒரு லட்சத்திற்கு மேல்
(எழுத்து மூலமான உறுதிப்பாட்டுடன்)

O/L தேவையில்லை

**4 வருட விசா**

தங்குமிடம், உணவு, பயணச்சீட்டு இலவசம்
40 வயதிற்குட்பட்ட நீங்கள் படிக்க,
உழைக்க சட்ட ஆலோசனை.

**50% கட்டணச் சலுகை**
(எதிர்வரும் 19/7/2013 வரை மட்டுமே)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 2219016, 0215689090
(C-4019)



**காணி விற்பனைக்கு**

கோப்பாய் முருகன் கோவில் பிரதான வீதிக்கு சமீபமாக வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு. (3386)

உடன் தொடர்புகளுக்கு
0776758131
0776740836



**வேலைவாய்ப்பு** தொடர்பு: **0775040714**

யாழ். நகரிலுள்ள பான்சி கடைக்கும், புத்தகக் கடைக்கும் ஆட்கள் தேவை.
பொதி செய்யக்கூடியவர்கள் தேவை. (3394)



## இந்தியத் திருத்தல யாத்திரை

நாட்கள்: 18+02 யாத்திரிகர்கள்: 10 ஆரம்பம் 05.09.2013
நிறைவு: 25.09.2013

மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார்பட்டி, தஞ்சாவூர், திருப்பதி, ஆறுபடை வீடுகள், மாங்காடு, வேற்காடு புவனேஸ்வரி, காஞ்சி காமாட்சி, காஞ்சி வரதர், பஞ்சபூதத் திருத்தலங்கள், 9 நவக்கிரக ஆலயங்கள், வேளாங்கண்ணி, அஷ்டலெட்சுமி, அலமேலுமங்கா, சீரடிபாபா சென்னை, திருநாரையூர், சரஸ்வதி கோவில், வலஞ்சுழி விநாயகர், திருக்கடையூர் அபிராமி, சக்தி அம்மன் கோவில், மீனாட்சி சுந்தரேஸ்வரர், இராமேஸ்வரம் சோட்டாணிக்கரை, கொடுங்களுர், குருவாயூர், பொற்கோவில், தோணியப்பர், சிதம்பரம், சீர்காழி, மருத்தீஸ்வரர், பட்டீஸ்வரம் துர்க்கா, சுசீந்திரம் ஆஞ்சநேயர், கன்னியாகுமரி, கபாலீஸ்வரம், கானகஸ்திரி, பார்த்தசாரதி, குபோலிங்கேஸ்வரர், உத்திரகோச மங்கை, திருப்புவானி, நவபாஷாணம், சுசீந்திரம் திருக்கோவில், வனத்திருப்பதி, உவரிசிவன், தாராசுரம்சிவன், ஊட்டி, பாண்டிச்சேரி, மெரீனா பீச்சும் காணலாம், ரிஷி வந்தியம் பாகம் பிரியாள் அம்மன் தரிசிக்கலாம்.

**தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை...**

இருவழி விமான ரிக்கெட், ஏயார் போட் செல்லவும் திரும்ப வரவும் வாகன வசதி, காலையும் இரவும் கோப்பி, ரிபன், தரமான சைவ மதிய உணவு, ஹோட்டல்களில் சாதம், நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு லீற்றர் மினரல் வோட்டர் (குடிநீர்), தங்குமிடங்கள், 2 பேருக்கு 2 கட்டில் மெத்தையுடன் குளியல் அறையுடன் கூடிய அறைகள் எடுத்துத் தங்க வைக்கப்படுவார்கள்.

யாத்திரை தொடங்கி முடியும் வரை AC, Audio, Vedeo, உள்ள சொகுசு வாகன வசதி,

**கட்டண விபரம் கேட்டு அறிக!**

விருப்பமுடையோர் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்யுங்கள்.

தொடர்புகளுக்கு: கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்,
No: 66/2-3/2 JOSEPH DIAS LANE
COLOMBO-15
T.P:0777680102, 0724222989
Web:www.Sridevipilgrims.com

(சி/4016)

இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000 ஆம் ஆண்டு கால மான என் மனைவியின் வேண்டுகோளுக்கமைய சேவைநலன் கொண்டு குறைந்த செலவில் நடத்தப்படுகிறது.



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Francaise de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான Certificate ஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில்... T.P: 0212228093
61, Kachchery-Nallur Road, Jaffna.
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்) (3347)


### அவுஸ்...

பட்டுள்ளனர். குறித்த படகில் 150 பேர் பயணித்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. படகு கவிழ்ந்ததில் புகலிடக் கோரிக்கையாளர்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரத்திலும் கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அருகாமையில் படகொன்று கவிழ்ந்ததில் சிலர் உயிரிழந்தனர். இந்தப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்தவர்கள் எந்த நாட்டைச்சேர்ந்தவர்கள் என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை. (எ-11)


FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
**FRENCH CLASSES**

France,Canada,Swiss,Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட சர்வதேச Certificates இனை பெறலாம்
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007)
இது வரைக்கும் 718 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்...
இவ் வருடத்தின் 8வது பிரிவு வெகு விரைவில் ஆரம்பம்...
No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
DELF பரீட்சையில் யாழில் எமது நிறுவனத்திலேயே அதிகமானோர் சித்தி.
0779 789 456
English,Deutsch,Italian, Sinhala. Classes..... (C-4017)





(3387)



சாவகச்சேரியிலும் கலட்டிச் சந்தியிலும்

## நியூ எய்சர் சப்ளையர்ஸ் இன் ஆடி மாத விலைக்கழிவு

- பல வர்ணங்களில் இறக்குமதி செய்யப்பட்ட டைல் வகைகள் 8X8 டைல், 12X8 டைல், 01X01 டைல், 16X16 டைல், 02X02 டைல்
- கொமேட் வகைகள்
- தண்ணீர் தாங்கிகள் 2000L, 1000L, 750L, 500L, 250L
- PVC பைப்புகளும் அதன் பொருத்துகளும், எலக்ரிக்கல் பொருட்கள்
- Fan வகைகள் 2800/- தொடக்கம்

அனைத்தும் குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ள...

சாவகச்சேரியில்...
இல.325. கண்டி வீதி.
A9, சங்கத்தானை. 021 7201802. சாவகச்சேரி
(வைத்தியசாலைக்கும் இந்துக் கல்லூரிக்கும் இடையில்)

கலட்டிச் சந்தியில்...
இல.10, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்
(யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கும் தொழில் நுட்பக் கல்லூரிக்கும் இடையில்)

- Transport Free
- டைல் பதிப்பவர்கள், குழாய் பொருத்துநர்கள், எலக்ரிக் வேலை செய்பவர்கள் எம்மிடம் உண்டு.
- இவ்வேலை தெரிந்தவர்களும் எம்மிடம் தொடர்பு கொண்டால் உங்கள் பிரதேச வேலைகளை உங்களிடம் கையளிப்போம். (C-4021)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org